Registered as a News Paper    பக்கங்கள் 8    விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நல்லூர் ... நூலகம்

## ஆண்டு 1 மாணவருக்கு உடற்கல்விப் பயிற்சி

ஆண்டு ஒன்றிலிருந்தே அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் உடற்கல்விப் பயிற்சி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி இப்பயிற்சிநெறியைக் கற்பிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்படி கல்வி அமைச்சு உத்தரவிட்டுள்ளது. இதன் முதற் கட்டமாக வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆரம்பப் பாடசாலை உடற்பயிற்சி ஆசிரியர்களுக்குச் சேவைக்காலப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. டிசம்பர் மாதம் 19, 20-ம் திகதிகளில் இவ் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப் (8-ம் பக்கம் பார்க்க)

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    மாசி 22    [05 - 3 - 1993]    வெள்ளிக்கிழமை    ஓசை 15

# தலைவர் பிரபாவின் பி.பி.சி. பேட்டி

# கொழும்பு அரசியலில் பரபரப்பு

[கொழும்பு]

தலைவர் பிரபாகரன் அண்மையில் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் இனப்பிரச்சினை தீர்வு குறித்து வெளியிட்ட கருத்துக்கள் கொழும்பிலுள்ள தமிழ், சிங்கள அரசியல் வட்டாரங்களில் பெரும் குழப்பத்தையும், பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளதாக அங்கிருந்து வெளிவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை, தலைவர் பிரபாகரனின் கருத்துக்களை அரசாங்க தரப்பு மிக அவதானமாக ஆராய்ந்து வருவதாகவும், கருத்து கூறுவதில் கவனத்துடன் இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தலைவர் பிரபாகரன் அண்மையில் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில், இனப்பிரச்சினைக்குத் தீர்வாகத் தமிழர் தாயகத்தின் பூகோள முழுமை அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி அமைப்பு முறை முன்வைக்கப்பட்டால், அதைப் பரிசீலனை செய்ய விடுதலைப்புலிகள்இயக்கம் தயார்எனத்தெரிவித்துள்ளமையே அரசியல் வட்டாரங்களில்இப்பரபரப்பும், குழப்பமும் ஏற்படக் காரணமாகும்.

இந்நிலை குறித்து கருத்து வெளியிட்ட ஏ.எவ்.பி செய்தி ஸ்தாபனம் தலைவர் பிரபாகரன் வெளியிட்டுள்ள சமாதான யோசனைகள் அரசாங்க மட்டத்தில் பாரிய தடுமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டது.

இதேவேளை, தலைவர் பிரபாகரனின் பேட்டியைச் சிறிலங்கா அரசு மிக எச்சரிக்கையுடன் தனது உணர்வலைகளை வெளியிட்டுள்ளதெனப் பி. பி. ஸி தெரிவித்தது.

அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்கா இவ்விடயம் குறித்து கருத்து வெளியிடுகையில்;

விடுதலைப் புலிகள் பாராளு (8ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் பயணிகள் கவனத்திற்கு

செஞ்சிலுவைச் சங்க அனுமதி பெற்று கப்பலில் பயணம் செய்யும் பயணிகள், பயண அனுமதிக்கான விண்ணப்பப் படிவத்தை கோண்டாவில் விசாரணைச் செயலகத்திலும் முத்திரைச் சந்தை, வதிரி, சாவகச்சேரி பயண அனுமதி வழங்கும் காரியாலயங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

## 10 நிலையங்களில் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

யாழ்.மாவட்டத்தில் நாளை சுமார் 10 பரீட்சை நிலையங்களில் ஆங்கில ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை நடைபெற இருக்கின்றது. இப்பரீட்சைக்கு சுமார் 1500 பரீட்சார்த்திகள் வரை தோற்றுகின்றனரென யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இப்பரீட்சைகுரிய வினாத்தாள்கள் நேற்று யாழ். குடாநாட்டிற்கு எடுத்து வரப்பட்டன.

இப்பரீட்சைக்கான ஆயத்தங்களை கல்வி திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

## கல்வி டிப்ளோமா உடன் விண்ணப்பிக்குக

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறிக்கு தோற்றவுள்ள ஆசிரிய, மாணவர்கள் தமது பகுதி I பரீட்சைக்கான விண்ணப்பங்களை தவறாது அவரவர் நிலையங்களில் பெற்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பூர்த்திசெய்து ஒப்படைக்கும்படி யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## மாகாண அமைச்சு நிராகரிப்பு

யாழ்.குடாநாட்டில் கடமையாற்றும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களினதும் சம்பளத்தை காசாக வழங்குமாறு யாழ். கல்வித்திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை வடகிழக்கு மாகாணக் கல்வியமைச்சு முற்றாக நிராகரித்துவிட்டதாக யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது. (பா)

## தமிழகத்திடம் தீர்வுத்திட்டம்; சிறிலங்கா கோருகிறது

[கொழும்பு]

இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான யோசனைகளை இனப் பிரச்சினைக்கான பரிந்துரையைச் சமர்ப்பிக்கும் பணியில்ஈடுபட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு அனுப்பி வைக்குமாறு தமிழ் நாடு அரசை சிறிலங்கா கேட்டுள்ளது.

நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பேசிய அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்கா இனப்பிரச்சினைக்கான யோசனை எதுவும் இருந்தால் தமிழ் நாடு அரசு தமது யோசனையைப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு அனுப்பி வைக்கலாம்என்றார்.

## உயர்கல்வி அமைச்சின்கீழ் தொழில் நுட்பக் கல்வி

தொழில் நுட்ப கல்விப் பிரிவை கல்வி உயர்கல்வி அமைச்சின் கீழான ஒரு தொழில்நுட்ப கல்வித்திணைக்களமாக மாற்றப்படவுள்ளது.

இத் தொழில் நுட்ப கல்விப் பிரிவை தொழில் நுட்ப கல்வித் திணைக்களமாக மாற்றுவதற்கு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா ஆலோசனை வழங்கியிருந்தார்.

ஜனாதிபதியின் இவ் ஆலோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சர் விக்கிரமசிங்க தெரிவித்தார். இதன்மூலம் தொழில் நுட்பப்பிரிவு நிதித் துறையில் சுய அதிகாரத்தையும் பலம் மிக்க நிர்வாக அதிகாரத்தையும் பெறுகின்றது.

## கனடாவிலுள்ள சிறிலங்கா தூதுவராலய ஊழியர் அரசியல் தஞ்சம் கோரினர்

(கொழும்பு)

கனடாவிலுள்ள சிறிலங்கா தூதுவரகத்தில் சிற்றூழியர்களாகப் பணிபுரிந்த இருவர் அந்நாட்டில் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பித்துள்ளனர்.

கனடாவிலிருந்த சிறிலங்கா தூதுவர் வால்டர் ரூபசிங்கவினால் சமையல் உதவியாளராகவும், வீட்டுப் பராமரிப்பாளராகவும் கனடாவிற்கு அழைக்கப்பட்ட இருவருமே தற்போதுஅங்கு அகதி அந்தஸ்துக் கோரியுள்ளனர் எனத் தெரிய வருகிறது.

தற்போது கனடாவின் புதிய தூதுவராக வால்டர் பெர்னாண்டோ பதவிஏற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசு மீதான அழுத்தமே உணவுஅனுப்பக் காரணம்

### பி. பி. ஸி. தெரிவிப்பு

[கொழும்பு]

மதத்தலைவர்கள் மற்றும் மனிதநேய வெளிநாட்டு நிறுவனங்களின் வற்புறுத்தலினாலேயே சிறிலங்கா அரசு யாழ். குடாநாட்டிற்கு திடீர் என அதிகளவு உணவுப் பொருள்களை அனுப்ப நேர்ந்தது என லண்டன் பி. பி. ஸி. செய்தியாளர் கிறீஸ்மொரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக செய்தியாளர் மேலும் தெரிவிக்கையில்; கிளாலி போக்குவரத்துத் தடையை நீக்கி மக்கள் சுதந்திரமாக நடமாடும் ஒரு பாதை கிடைத்தால் மட்டுமே யாழ். குடாவில் நிலவும் உணவுப் பற்றாக்குறையை தீர்க்க முடியும் என்றும், உணவுத் தேவையை பூர்த்தி செய்ய கப்பல் மூலம் அனுப்பும் உணவுப் பொருள்கள் போதியதாக இல்லை எனவும் குறிப்பிட்டார்.

## கச்சதீவுக்கு அருகில் மீன்பண்ணை

(சென்னை)

கச்சதீவுக்கு அருகில் கடலில் மீன் பண்ணை ஒன்றை அமைக்கும் முயற்சியில் இந்திய மத்திய அரசு ஈடுபடும் என்று மத்திய கடல் துறை ஏற்றுமதி அபிவிருத்தி இயக்குநர் சத்திவேல் கொச்சியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்;கூண்டுவடிவில் அமைக்கப்படும் இந்த கடல் மீன் வளர்ப்பு பண்ணை திட்டத்திற்கு சுமார் ஐந்து கோடி ரூபா முதலீடு செய்யப்படும் எனவும், டென்மார்க் அரசின் உதவியுடன் இத்திட்டம் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும், இதன்மூலம் ஆண்டுக்கு பத்துக்கோடி ரூபா மதிப்புள்ள மீன் பெறப்படலாம் என்றும் தெரிவித்தார்.

## விசேட பரீட்சை மொத்தப் புள்ளிகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

நடைபெற்ற 1991-ம்ஆண்டு விசேட க. பொ. த உயர் தரப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் மொத்தப் புள்ளிகள் யாழ். கல்வித் திணைக்களம் வந்து சேர்ந்துள்ளன.

பாடசாலைப் பரீட்சார்த்திகளின் மொத்தப் புள்ளிகளின் விபரம் பாடசாலை அதிபர்களுக்கு இன்று யாழ் கல்வித் திணைக்களத்தில் வைத்து வழங்கப்படும் எனவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் புள்ளி விபர கடிதங்கள் நேற்று தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன என யாழ் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளது. (பா)

## கப்பலில் கொப்பிகள்

கொழும்பில் இருந்து யாழ். குடாநாட்டுக்கான ஒரு தொகுதிஉணவு மற்றும் அத்தியாவசிய பொருள்களுடன் பருத்தித்துறை வந்தடையவுள்ள அடுத்தகப்பலில்யாழ்மாவட்ட மாணவர்களுக்கென 'சுமார் பத்து இலட்சம் ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகள் எடுத்துவரப்பட இருக்கின்றன.

யாழ் அரச அதிபரின் முயற்சியினால் இதற்கான அனுமதியை கூட்டுப்படைகள் தலைமை அலுவலகம் வழங்கியுள்ளதாகவும், இந்த அப்பியாசக் கொப்பிகள் கொள்வனவு செய்வதற்கு தேவையான முற்பணத்தை யாழ். கல்வித் திணைக்களம் கேட்டுக்கொண்டதற்கிணங்க வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சு வழங்கியுள்ளதாகவும் யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது. (பா)

## உளவாளிகள் !!!

## அவதானமாக இருக்கவும்...!

பகல் இரவாய் எம்மோடு பலம்போன்று நிற்கும் சிலரால்
ஒரு நொடியில் இடிவிழலாம்!

## வரி விளம்பரம்

**வேப்பம் பழுத்தல்**

துப்பரவான வேப்பம் பழுத்தல் (இலை) தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி-6119)

**"நீமியா உரம்"**

கீரைவகைகள், துவரை, கனிவர்க்கங்கள், வீட்டு வளவுகளில் விளைவிப்போம். பயன் பெறுவோம். அதற்குப் பசளையாகவும், பாதுகாப்புச் சாதனமாகவும் உதவுவது ''நீமியா உரம்.'' கிலோஒன்று கொண்ட பக்கற் ரூ 18/- மட்டுமே. அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகின்றது. மில்க்வைற்(சி-6118)

**பாடல் பதிவு**

நீங்கள் விரும்பும் பாடல்களை இப்போது கொம்பக்ட் டிஸ்க் மூலம் பதிவு செய்து பெற்றிட - இன்றே வாருங்கள் ஷண் றெக்கோடிங் ஸ்பொட் பஸ்நிலைய வயிரவர் கோவில் அருகாமையில், நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம். (4068)

**அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாம்**

எம்மிடம் றேடியோ, மணிக்கூடு திருத்தும் வாடிக்கையாளர்கட்கு மூன்று (3) அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாமாக வழங்கப்படும். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். கிளை: இலங்கை வங்கி அருகாமை, சாவகச்சேரி (எலெக்ரோனிக் ஓட்டோமற்றிக் கடிகாரங்கள் திருத்துவதில் கைதேர்ந்தவர்கள். (சி-6063)

**அராலியூரரின் நாடகங்கள்**

யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்குத் தமிழில் முதன் முதலாக நாடகங்கள் எழுதி அரங்கேற்றிய பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் மாணவர்களில் இன்று நாடகம் எழுதும் ஒரேயொரு மாணவனான, 200 வானொலி நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் முதலாம்பிள்ளை30/- (4398)

**இன்று சனிமாற்றம்**

இன்று (5. 3. 93 சனி கும்ப ராசிக்கு மாற்றமடைகின்றது. சனிமாற்றப் பலாபலன்கள் எல்லா ராசிகளுக்கும் ஒரே பிரதி ரூ. 8/50. எங்கும் விற்பனையாகின்றது. பாலாஜி புத்தகசாலை, யாழ்ப்பாணம். (நூலாசிரியர் Prof சத்தியதாஸன் Mech E, Elec E.) (4397)

**இன்று பவளவிழா**

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் பவளவிழா இன்று வெள்ளிக்கிழமை பொருட்காட்சியுடன் ஆரம்பமாகின்றது.

நாளை சனிக்கிழமைமாலை பவளவிழா மலர் வெளியீடும் நாளை மறுதினம் ஞாயிறு மாலை சான்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்ச்சியும் இடம்பெற உள்ளன.




(சி-6114)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை

**வீரபாண்டியன் - யூலியன்**

(இம்மானுவேல் செல்வேந்திரன் குரூஸ்)

தாயின் மடியில் பிஞ்சாய் 27-11-1974 — தாயக மண்ணின் விடிவுக்காய் 05-03-1992

பேரிகை கொட்டி ஆலங்கேணி வழியாக புகவந்த
கூலிப்படையைப் புறமுதுகிட்டு ஓடவைத்த
கட்டைக்காட்டுச் சமரில் காவியம் படைத்தவனே
தோழர்களால் வீரபாண்டியன் எனப் பெயர்
பெற்றாய் ஆண்டொன்று முடிந்ததின்று
மெல்லென இருந்தாற்போல் சொல்லாமல்
கொள்ளாமல் தமிழீழம் மலராது தமிழீழ மலர்வுக்கு
நெய் வார்க்க உன்னைப்போல் பல்லாயிரம்
வேங்கைகள் அணிவளர்வர் காவியமான உன்
கற்பனையை தமிழீழம் மெய்ப்பிக்கும் உன் கனவும்
நனவாகும்.

இவருடன் களத்தில் அன்று வீரச்சாவடைந்த சக போராளிகளான லெப்டினன்ட் வேந்தன் (திருக்கோணமலை) லெப்டினன்ட் நித்தியா (இத்தாவில் பளை) இவர்களுக்கும் எமது அஞ்சலியைத்தெரிவித்துக் கொள்கிறோம். 05-03-1993(இன்று)வெள்ளிக்கிழமை காலை 6.00மணிக்கு யாழ். அடைக்கலநாயகி ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குபற்றி இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக பிரார்த்திக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.


37, 5-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

தாய், சகோதர, சகோதரிகள், மருமக்கள், அத்தான், மச்சாள், உற்றார், உறவினர், நண்பர்கள். (பி.ஐ. பர்னான்டோ ஸ்தாபனத்தார்.)

[சி-6135]

## 90-ம்நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்

தோற்றம் 01 — 12 — 1924



மறைவு 06 — 12 — 1992

அமரர்

**தம்பர் காசிப்பிள்ளை முருகேசு (தம்பு)**

கிளாலியில் உறங்கினை
கீழவர் செய்கையால்
முழுமதி யெனவரும்
முதல்வனே மடிந்தனை
கொடுமைகள் முடியும்
கொடியது உயரும்
அதுவரை அமைதிகொள்
அன்புடன் நினைக்கின்றோம்.

கனகரத்தினம் வீதி,
வட்டுக்கோட்டை.

மனைவி, மக்கள்.

[4399]

## நினைவு கூருகின்றோம்...

**1993-03-05**

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா- ஆலங்குளம், கன்னாட்டிப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைத்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

சுதாகர் (- சுப்பிரமணியம் - பம்பைமடு - வவுனியா)

இதே சம்பவத்தில் கொலையுண்ட பல தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு யாழ்- வல்வை, தொண்டமானாற்றுப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த-

நிருபன் (வெற்றிவேல்பிள்ளை இதயவேல்- சாஸ்திரி கூழாங்குளம் - வவுனியா)

கமல் (கபிரியேற்பிள்ளை கிறிஸ்துராசா- சென்.தோமஸ் வீதி, முனை, பருத்தித்துறை - யாழ்.)

1988ஆம் ஆண்டு மொறவெவப் பகுதியில் இந்தியப் படையினராற் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1989ஆம் ஆண்டு மணலாறு - குமுழமுனைப் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

லெப். சூரன் (அருணாசலம் சுரேந்திரராசா -4-ம்வட்டாரம், புதுக்குடியிருப்பு-மணலாறு)

கிளிநொச்சி - ஆனையிறவு, சுண்டிக்குளம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

நிசாந்தன் (யோகரத்தினம் பிரதாபன்- தெணியம்பை, வல்வெட்டித்துறை - யாழ்.)

யாழ்- மானிப்பாய், நவாலிப் பகுதியில் தேசவிரோதக் குழுவினராற் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு மட்டக்களப்பிற் சிறிலங்கா இராணுவத்தினராற் சுட்டுக் கொல்லப்பட்ட கரடியனாறு- இராஜபுரம், கித்துள் பகுதிகளைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

1992 ஆம் ஆண்டு யாழ் - வடமராட்சி, கட்டைக்காட்டு முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

லெப். வேந்தன் - வின்சன் (அமிர்தநாதன் அலஸ்ரின் - சர்வதேச வீதி, பள்ளத்தோட்டம்- திருமலை)

லெப். கலைஞன் - நித்தியா (சின்னப்பிள்ளை பாஸ்கரன் - இத்தாவில், பளை - கிளிநொச்சி)

வீரபாண்டியன் - ஜூலியட் (இம்மானுவேல் தெய்வேந்திரன் - தொடர்மாடி, குருநகர் - யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6136)

**மீண்டும்**

யாழ். நவீன சந்தை முன்பாக

புதிய சுவையுடன் தரம் மிகு

**கோழிப் பிரியாணி**


# றிக்கோ

370, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

(சி-6122)

# பெண் விடுதலை என்றால் என்ன?

# தலைவர் பிரபாகரன் தரும் விளக்கம்



**பெண் விடுதலை என்றால் என்ன? என்பது குறித்து தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கடந்த ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையினை இங்கே தருகிறோம்.**

பெண் ஒடுக்குமுறை என்பது யுகம் யுகமாக எல்லா நாடுகளிலும், எல்லாச்சமூகங்களிலும், எல்லாப் பண்பாடுகளிலும் நிலவி வந்த ஒரு சமூகஅநீதி. இந்த சமூகஅநீதி முறை இன்னும் இந்தப் பூமியிலிருந்து அகன்று விடவில்லை.

நீண்ட காலமாக வளர்ச்சி கண்ட நாடுகளில் தொடர்ச்சியாக நடந்துவந்த உரிமைப் போராட்டங்களின் பலாபலனாக பெண்ணினம் குறிப்பிடத்தக்க சில வெற்றிகளை மட்டும் ஈட்டிக் கொள்ள முடிந்தது. அடிப்படையான மனித உரிமைகளையும் அரசியல் சுதந்திரங்களையும் பெண்கள் வென்றெடுக்க முடிந்தது. கல்வி வாய்ப்பும், தொழில் வாய்ப்பும் பெற்றுக் கொள்ள முடிந்தது. எனினும் இந்த நாடுகளில் பெண்ணின் பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை. இங்கு பழைய பிரச்சினைகள் புதிய வடிவங்களில் தோற்றம் கண்டு வருகின்றன.

அன்றொரு காலம்; மேற்குலகில் முதலாளித்துவம் எழுச்சி கொண்டு வளர்ச்சி கண்ட சகாப்தத்தில் பெண்ணினம் மிகவும் ஈவிரக்கமற்ற சுரண்டல் முறைக்கு ஆளாகியது. அப்பொழுது பெண் ஒடுக்குமுறையின் மூலகாரணி முதலாளித்துவம் எனக் கூறப்பட்டது. தனியார் சொத்துடமை நீக்கப்பட்டால் சமத்துவமற்ற பொருளாதார அமைப்பு ஒழிக்கப்பட்டால், பொருளுற்பத்தியில் பெண்கள் ஈடுபட்டால் பெண்ணினத்திற்கு விடிவு காலம் பிறக்கும் என வாதங்களும் முன் வைக்கப்பட்டன. இதனால் விடுதலை வேண்டி நின்ற பெண்ணினம் சமூகப் புரட்சிப் போராட்டங்களில் அணி சேர்ந்து கொண்டது. பெண்களின் பங்களிப்புடன் பல நாடுகளில் சமூகப் புரட்சிகள் நிகழ்ந்தன. சமுதாய மாற்ற மூலம் பொருளாதார சமத்துவத்தைக் கட்டி எழுப்பிய நாடுகளில் பெண்களின் வாழ்க்கை நிலை உயர்ந்தது. சமூக அந்தஸ்து மேம்பட்டது. ஆயினும் இந்நாடுகளில் பெண் ஒடுக்குமுறை முற்றாக நீங்கியபாடில்லை. சமதர்ம சமூக உலகத்திலும் பெண்ணுக்குச் சமநீதி கிடைத்ததாகக் கூறிவிடமுடியாது-

இந்த சமூகப் பரிசோதனை அனுபவங்களிலிருந்து நாம் ஓர் உண்மையைக் கண்டு கொள்ளலாம். அதாவது பொருளுலகத்தை எந்தெந்த வடிவங்களில் சீரமைத்தாலும் ஆண்களின் மனோவுலகில், பெண்மை பற்றிய அவர்களது கருத்துலகில் ஆழமான மாற்றங்கள் நிகழாமல் பெண்சமத்துவம் சாத்தியமாகப் போவதில்லை.

பெண்ணினத்தின் விடுதலை நோக்கிய பாதையில், அவர்களது சமூக, பொருளாதார வாழ்வு மேம்படுவது அவசியம் என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆயினும் அதேவேளை ஆண்-பெண் உறவிலும், அந்த மானசீக உலகிலும் மாற்றங்கள் தேவை. உண்மையான சமத்துவம் என்பது ஆண்-பெண் உறவில் எழும் ஆழமான புரிந்துணர்வில் தான் சாத்தியமாகிறது.

எமது சமூகக் கட்டமைப்பில் பெண்ணினம் மிகவும் மோசமான ஒடுக்குமுறை வடிவங்களை எதிர் கொண்டு நிற்கிறது. மிகவும் பின் தங்கிய சமூக பொருளாதார வாழ்வு ஒரு புறமும், அரச அடக்குமுறை அழுத்தங்கள் மறுபுறமும், ஆணாதிக்க கொடுமைகள் இன்னொரு புறமுமாக பல பரிமாணங்களில் எமது பெண்கள் ஒடுக்குமுறையைச் சந்திக்கின்றார்கள் இங்குபெண் விடுதலை என்பது ஒரே காலத்தில் பல்வேறு முனைகளில் தொடுக்கப்பட வேண்டிய ஒரு போராட்டமாக அமைந்து விட்டது.

எமது தேசிய சுதந்திர இயக்கம் பெண் விடுதலையைத் தனது அடிப்படை அரசியல் குறிக்கோள்களில் ஒன்றாக வரித்துக் கொண்டு செயற்பட்டு வருகிறது.

பெண் விடுதலை எனும் பொழுது அரச அடக்கு முறையிலிருந்தும், சமூக ஒடுக்குமுறையிலிருந்தும், பொருளாதார சுரண்டல் முறையிலிருந்தும் பெண்ணினம் விடுதலை பெறுவதையே குறிக்கிறோம். எனவே எமது இயக்கம் வடிவமைத்துள்ள பெண் விடுதலைப் போராட்டமானது தேச விடுதலை, சமூக விடுதலை, பொருளாதார விடுதலை என்ற குறிக்கோள்களைக் கொண்ட மும்முனை விடுதலைப் போராட்டமாக முன்னெடுக்கப்படுகிறது.

இந்த மும்முனைப்போராட்டங்களில் தேசிய விடுதலை, அதாவது எமது மண்ணின் விடுதலை முக்கியமானது. எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது மண்ணை முதலில் மீட்டெடுப்பது இன்றைய வரலாற்றின் தேவை. இந்த வரலாற்று நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது. எமது மண்ணின் விடுதலை பெண்ணின் விடுதலைக்கு மட்டுமன்றி எமது இனத்தின் விடுதலைக்கும் அத்திவாரமானது.

இந்த மண்மீட்புப் போர்க்களத்தில் இன்று தமிழ் இளம் பெண்கள் ஆயுதமேந்தி நிற்கிறார்கள். முழு உலகமுமே வியக்கும் வகையில் அபாரமான அர்ப்பணிப்புக்களைச் செய்து வருகிறார்கள். விடுதலைப்புலிகளின் மகளிர்படைப் பிரிவின் தோற்றமும், வளர்ச்சியும், எழுச்சியும் எமது இயக்கம் படைத்த மாபெரும் சாதனைகளில்ஒன்று என்பதை நான் பெருமிதத்துடன் கூற முடியும். தமிழீழப் பெண்ணினத்தின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் இது ஒரு புரட்சிகரமான திருப்பத்தைக் குறித்து நிற்கின்றது.

ஒரு விடுதலை இயக்கத்துடன் அணிசேர்ந்து கொள்வதன் மூலமே பெண்ணினம் தனது விடுதலை நோக்கிய இலட்சியப் பாதையில் வெற்றி பெறமுடியும். வீரமும், தியாகமும், துணிவும், தன்னம்பிக்கையும் கொண்ட புரட்சிப் பெண்களாக மாறமுடியும். பெண் விடுதலைக்குக் களம் அமைத்துக் கொடுத்திருக்கும் எமது புரட்சி இயக்கத்துடன் பெண்ணினம் அணிசேரும் பொழுதுதான் எமது போராட்டமும முழுமை பெறும்.

எமது சமுதாய அமைப்பில் நிலவிவரும் ஒடுக்குமுறை அழுத்தங்களிலிருந்தும் பெண்ணினம் விடுதலை வேண்டி நிற்கிறது. நீண்ட நெடுங்காலமாக எமது சமூகத்தில் வேரூன்றி வளர்ந்த மூடநம்பிக்கைகளும் இந்த மூட நம்பிக்கைகளிலிருந்து தோற்றம் கொண்ட சமூக வழக்குகளும் சம்பிரதாயங்களும் எமது பெண்களின் வாழ்க்கையை சீரழித்து வருகின்றது. ஆணாதிக்க அடக்குமுறையாலும், வன்முறையாலும், சாதியம், சீதனம் என்ற கொடுமையாலும் தமிழீழப் பெண்ணினம் விபரிக்க முடியாத துன்பங்களை அனுபவித்து வருகிறது.

இந்த ஒடுக்கு முறைச்சிறையிலிருந்து விடுதலை பெறுவதானால் பெண்ணினம் முதலில் தனக்கு எதிராக ஏவப்பட்டு வரும் ஒடுக்கு முறையின் தன்மைகளைப்புரிந்துகொள்ள வேண்டும். தனது சீரழிந்த வாழ்க்கை நிலையைச் சீரமைத்துக் கொள்வதனால் பெண்ணினம் தனது இழிநிலைபற்றி விழிப்புக் கொள்ள வேண்டும். தலைவிதி என்றும், கர்மவினை என்றும், தனக்காக விதிக்கப்பட்ட மனுநீதி என்றும், பழமை என்றும், பண்பாட்டுக் கோலம் என்றும் காலம் காலமாக மனவுலக இருட்டுக்குள் முடங்கிக்கிடந்தபெண்ணினம் விழித்தெழ வேண்டும்.

விழிப்புத்தான்விடுதலைக்கு முதற்படி.

விழிப்படைந்து எழுச்சி கொள்ளும் பெண்ணினமே ஒரு போராட்ட சக்தியாக உருப்பெற முடியும். அந்தப் போராட்ட சக்தியால்தான் ஒடுக்குமுறை விலங்குகளை உடைத்தெறிய முடியும்.

ஆணாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் என்பது ஆண்களுக்கு எதிரான போராட்டம் அல்ல. இது ஆணாதிக்க அறியாமைக்கு எதிரான கருத்துப் போராட்டமாகும். இந்தச் சித்தாந்தப் போராட்டம் ஆண்களின் மனவுலக மாற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும்.

மனித உறவுகளில் அடிப்படையானது ஆண் - பெண் உறவு. இந்த உறவு சாதாரண சமூக உறவு அல்ல. இது மனித உயிர் இயக்கத்திற்கும், மனித இன விருத்திக்கும் மூலமானது. மனித இனத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஆதாரமானது.

ஆண் -பெண் உறவில் எழும் அபசுரங்களாகவே இன்று பெண்ணினம் எதிர்கொள்ளும் பல அவலங்கள் தோற்றம் கொள்கின்றன.

ஆணும் பெண்ணும் ஒத்திசைவாக ஒருவர் ஒருவரின் சுதந்திரத்தையும், சமத்துவத்தையும், கௌரவத்தையும் மதித்து குடும்ப வாழ்வின் பொறுப்புகளைப் பகிர்ந்து, சமூகத்தின் மேம்பாட்டிற்கு உழைத்து, பரஸ்பர புரிந்துணர்வுடன் பற்றுக் கொண்டு வாழ்ந்தால்இந்தப் பால்வேறுபாட்டால் எழும் பல்வேறு முரண்பாடுகள் நீங்கும். இந்த அன்புறவின் ஆழமான அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் ஆணினம் புரிந்து கொள்ளும் பொழுதுதான் ஆணாதிக்கமும் அதனால் எழும் அதிகார அடக்குமுறைகளும் அகன்றுவிட வாய்ப்புண்டு.

# விடுதலை வேண்டும் தேசங்களுக்கு ஒரு மாற்று ஐ. நா. நிறுவனம்

பாலகுமாரன்

இன்றைய உலகின் முதன்மை நிகழ்வு என்ன? 20ஆம் நூற்றாண்டு 'முடிவடையப் போகும் இந்நிலையில் உலக வரலாற்றினை நகர்த்தும் உந்து விசை என்ன? தமது தேசிய அடையாளத்தினை காப்பாற்ற உயிரையும் இழக்க தயாராகி அணியாக திரண்டு போராடும் மக்கள் தொகுதியின் தேசிய விடுதலை அமைப்புக்களே இவ்விசை என்பதே விடை. இது எமதுமுடிவல்ல உலகின் பொதுமுடிவு பனிப்போர் முடிவடைந்ததை தொடர்ந்து முன்னாள் சோவியத்தில் முன்னாள் யூகோசிலேவியாவில் இன்னுயபோல்கன் பகுதியில் தேசிய இன விடுதலைப் புயல்கள்வீசுவதை நாம்பார்க்கிறோம். குடியேற்றவாதம் மரணிக்க உதயமான புதிய நாடுகளில் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் போராடுவதை பார்க்கிறோம். இவை ஒருபுறமிருக்க இப்புவியின் முதல் மக்கள் தொன்மைநாகரிகங்களின் சொந்தக்காரர்கள் எனப்படும் பூர்வீக மக்கள் மௌனப்புயலாகதாம்இழந்த மண்ணுக்காக மறைந்த தமது மேன்மையை மீட்பதற்காக உரிமைக் குரல் எழுப்புகிறார்கள். ஆனால் இவர்கள் எல்லாரும் தத்தமது விடுதலைக் குரலை ஓங்கி ஒலிக்க ஐ.நாவின் "புதிய உலக ஒழுங்கு" இடம் கொடுக்கப் போவதில்லை ஐ. நாவின் கதவு இவர்கட்காக திறக்கப் போவதில்லை ஐ. நாவின் செயலர் பூட்ரோஸ்காலியோ "இன்று தோன்றியிருக்கும் இப் புதிய நுண்மைத் தேசியவாதமானது (Micro-nationalism) சருவதேச சமூகத்தை பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கியுள்ளது. இந்நிலை நீடிக்க நாம் அனுமதித்தால் இந்நூற்றாண்டுமுடிவில் ஐ. நாவின் அங்கத்துவம் 180 இலிருந்து 300 ஆகிவிடும்" என்கிறார். "எனவே நாங்கள் நாடுகள் பிரிவதை விட இணைந்திருப்பதை ஊக்கப்படுத்தவேண்டும்" என மேலும் அவர் கூறுவதை யாரும் கேட்கத் தயாராக இருப்பதாக தெரியவில்லை.

இன்று விடுதலைக்குபோராடும் அமைப்புக்கள் தமக்கென தனியான சருவதேச களமொன்றை உருவாக்கிவிட்டனர். இந்த மாற்று ஐ நா 1991ம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றது. ஒல்லாந்து நாட்டின் சட்டவறிஞரான மைக்கல் வான் வோல்ட் (Michel Van Wolt)என்பவரே இதனை உருவாக்கிய பெருமகனாவார். அவரே தற்போதைய இதன் செயலாளர் நாயகமுமாவார். பிரதிநிதித்துவப்படாத தேசங்களினதும் மக்களினதும் தாபனம் என இம்மாற்று ஐ.நா அழைக்கப்படுகின்றது. (Unrepresented Nations and Peoples Organization) (UNPO) இதன் மூன்றாமாண்டு பொதுச்சபை மாநாடு சென்ற தை மாதம் ஒல்லாந்துதலைநகரானகேய்க்கில் நடைபெற்றது. இது ஒரு புதினமான மாநாடு. ஏனென்றால் புதிய தேசங்களாக பரிணமிக்க இருக்கும் 60 க்கும் மேற்பட்ட தேசியங்களை சார்ந்தவர்கள் இங்குகூடித்தத் தமது தேசியக் கொடிகளை ஏற்றி தத்தமது விடுதலையை துரிதப்படுத்த, உறுதிப்படுத்த முயன்றனர். ஒருவருக் கொருவர் உதவவேண்டுமென்ற நல்லெண்ண ஆதரவு இங்குமுழுமையாக நிலவியது இத்தாபனத்தின் வளர்ச்சி வேகம் அதிசயத்தக்கது. தொடக்கத்தில் ஆறாக இருந்து இன்று

(7ஆம் பக்கம் பார்க்க)

## சிறுகதை

# தந்தையும் தம்பியும்

சி. ஸ்ரீகணேசலிங்கம் [ விஜயா ]
அற்கின்சன் வீதி,
வட்டுக்கோட்டை.

'சிவத்தார் நல்ல மனுஷனடா......'

சிவத்தார் என்னும் சிவப்பிரகாசத்தார் என்னுடைய மேலதிகாரிகளில் ஒருவர். அவரை இவன், என்னுடைய நண்பன் ஒரே அலுவலகத்தில் வேலை செய்பவன் நல்லவர் என்கிறான்.

சிவத்தார் நல்லவர் தானா?

எனக்குள் நெருடல்கள், நல்லவர் என்பதைத் தீர்மானிக்கும் அளவுகோல்கள் எவை? விளங்கிக்கொள்ள கடினமாக இருக்கிறது. சிவத்தாரை நல்லவர் என்று சொல்லுவதிலும் பார்க்க வல்லவர் என்றுசொல்லலாம் போல இருக்கிறது.

எதிரே பரந்து விரிந்து கிடக்கிறகடல். இதுகடலல்ல சமுத்திரம். நிரைகடலோரம் சிலம்பொலி முழங்கும் திருமலைக் கரை. வானத்துச் சூரியன் வையத்தை மறக்கத் தொடங்கும் கோலச் சீதள நேரம். கோணேசர்மலைக்கும் வைத்தியசாலைக் குன்றுக்கும் இடையே தூரத்தில் ஆரம் தொடுத்தாற்போல வளைந்து வரிசையாய் நிற்கும் மீன்பிடி வள்ளங்கள். வைர மணிகளாய் அவற்றில் மின்னும் தீபங்கள். கடலின் கருமையிலே ஒளிக் கோடுகளாய் நங்கூரமிடுகின்றன. இது என்ன திருமலையாள் அணிந்திருக்கும் மணியாரமோ என மனம் வியக்கிறது.

கற்பனை சுகமாகத்தான் இருக்கிறது. ஆனால் அந்த மணிஆர வளைவு.......?

'என்னடா யோசிக்கிறாய்..?'

'இதுஎன்னுடையகடலடா... எங்களுடைய கடல். இருக்கிறோமே இது ... இது எங்களுடைய மண். இதற்கு ஆரம் சூட்டியிருக்கிறார்களே... அது யார் தெரியுமா?'

எனக்குக் குணம் பேதலிப்பது செந்திலுக்கு தெரியும். நீயே சொல்லேன் என்பது போல வியந்து பார்க்கிறான் செந்தில்.

'மாலை சூட்டியிருப்பதுநாங்களில்லை செந்தில்... அவர்கள் இந்த மண்ணை சுபளீகரம் செய்தவர்கள். அந்த வள்ளங்களில் ஒன்று கூட தமிழனுடையதாக இருக்காது. இருக்கவும் விடமாட்டார்கள்.'

'எங்களுக்கு முயற்சியில்லை. வல்லமையில்லை. நாலு பேர் சேர்ந்தாவது ஒரு இயந்திரப் படகுவாங்குகிற துணிவில்லை. அவனுக்குக் கூலியாய்போறதுதான் எங்கடை தொழில். அதில்தான் ஒரு சந்தோசம்'.

'அப்படியில்லை செந்தில். அப்படி ஆக்கப்பட்டிருக்கிறோம். சிவத்தாரைப் பற்றி சொன்னியே சிவத்தார்எப்படிப்பட்ட ஆள் தெரியுமா?

'நீயுப்சிவத்தாரோட தண்ணி அடிக்கிறனிதானே...'

செந்தில் செருகியது குத்தீட்டி. நெஞ்சுக்காயம் வலித்தது. கசப்பாய் சிரித்தேன். நான் மகாத்மா இல்லை. சராசரி மனிதன் தான். தவறென்று தெரிந்தும் விடமுடியாத பழக்கம். சிவத்தாரின் சிநேகம் போல நான் பலவீனங்கள் உள்ளவன் தான். சில கவிஞர்களை மது எப்படிக் காவியம் படைக்கத் தூண்டுகிறதோ, அப்படியான பழக்கந்தான் எனக்கும் மதுவோடு, விருப்புஇன்றி சிலதை சாதிக்க, வீறுகொண்டு நிற்க, தயக்கங்களையும் இறுக்கங்களையும் குலைக்க சிவத்தார் போன்ற மனிதர்களை மடக்க எப்போதாவது இடையிடையே பாவிப்பது உண்டுதான். மதுவுக்கும்எனக்கும். உள்ள உறவின் எல்லை எனக்குத் தெரியும். அந்த எல்லை மீறினால் பகைவரும் எனவும் தெரியும். எனவே அளவோடு நிறுத்திக் கொள்கிறவழக்கமும்உண்டு. ஆனால் இதையெல்லாம் உனக்குவிளக்கத் தேவையில்லை. உனக்கு என்னை முற்றாய் புரியும். புரிந்தும் ஏன் இந்த ஈட்டி?

செந்திலும் சிவத்தாரை செவ்வையாக உணர்கிறானோ? அந்த உணர்வில் தான் எப்போதாவது சிவத்தாரோடு கூடிக் குடிப்பதை குத்திக் காட்டுகிறானோ?

'சிவத்தார்மறுபடியும் யாழ்ப்பாணம்போட்டாரெல்லே... ஏன் தெரியுமா?'

செந்தில் சிரிக்கிறான். 'நீதானே அவருடையகையாள் சொல்லன் கேட்பம்' என்கிறான்.

'கையாள்'...

செந்திலுக்கு இன்றைக்கு என்ன வந்தது? ஏன் என்மீது தொடர்ச்சியான சீண்டல் எறிகணைகளைவீசுகிறான்...'

'செந்தில் உனக்கு அவரைப் பிடிக்காது. அது எனக்குத் தெரியும். அவர் நல்லவர் என்று கதையைத் தொடங்கினாய். பிறகு குடிகாரனாக்கினாய். இப்ப என்னை கையாளாக்குகிறாய். ஏன் உனக்கு இவ்வளவு கோபம் ..?'

செந்தில் என் தோள் தட்டிச் சிரித்தான். 'மச்சான் நீ நல்லாய் உணர்ச்சி வசப்படுகிற பேர்வழி. உனக்குள்ளேயும் சிவத்தாரைப் பறறி எதுவோ புகைகிறது. சோழ மகராஜன் ஆண்ட நீலக் கடலில் ஆரோ தோரணம் கட்டுகிறான் என்று கொஞ்ச நேரம் குமைந்து சிவத்தாரை மழுப்பினாய். சிவத்தாரில் உனக்குள்ள சீற்றத்தை மறைக்கத்தான் நீதோரணம் பற்றி பேசுகிறாய்'

நான் மணலில் குப்புறப் படுத்து கன்னத்தில் கைதாங்கி நெடுமூச்செறிந்தேன் அவன் சொல்வதும் சரிதானோ? செந்திலிடம் எல்லாம் சொல்லத்தான் வேண்டும். எனக்குள் நேற்று நடந்தவை பின்னோட்டமிடப்படுகின்றன.

★

சிவத்தாரின் கையில்கடிதம். மாதக்கணக்கில் யாழ்ப்பாணக் கடிதத்தைக் காணாது தவித்த பின் வந்த கடிதம். ஒரே அறைக்குள் எதிரெதிராய் நானும் அவரும் மேலே மெலிதாய் சுழல்கிற மின் விசிறியையும் மீறி அவரது நெற்றி வியர்க்கிறது. முடியிழந்த முன் மண்டையில் குழல் விளக்கின் ஒளித் தெறிப்பில் வியர்வை முத்துக்கள் பளிச்சிடுகின்றன. கடிதத்தை வாசித்து முடித்து நிமிர்ந்த மனிதரின் கண்கள் சிவந்திருக்கின்றன. இலக்கில்லாத பார்வை எங்கோ சஞ்சரிக்க கண்ணாடியைக் கழற்றித் துடைக்கிறார். வலது கை நெற்றி வியர்வையை வழித்தெறிய சூழலை மறந்த பெருமூச்சு கனமாய் வெளிப்படுகிறது.

அவரே சொல்ல வேண்டும். என்ன பிரச்சினை என்று திடுமெனக் கேட்பது அழகாக இருக்காது. ஆனால் கேட்கவும் வேண்டும். என் விழிகள் வினாவோடு அவர் மீதுநிலைக்கின்றன. உதடுகள் 'ஐயா...' என மெல்ல இழுக்கின்றன.

அவர் கீழுதட்டைக் கடிக்கிறார். வலதுகையை முஷ்டியாக்கி இடது கையில் குத்துகிறார். கடுங்கோபத்தின் அடையாளம். எழுந்து சாவிக் கொத்தை என்னிடம் வீசுகிறார். 'நான் வரக் கொஞ்ச நேரமாகும் எல்லாவற்றையும் நீயே பார்த்துக்கொள்'.

அடுத்த கணம் அவர் வெளியே போய்விட்டார்.

அதன் பின் கடமை நேரம் முடியும்வரை சிவத்தார் வரவேயில்லை. வேலை முடிந்ததும் அவரது அறையை நோக்கிப் போனேன் நான்.

அறையில் சிவத்தார் பயணப் பையை அடுக்கிக் கொண்டிருந்தார்.

'தம்பி விடிய நான் பயணம்' அவரே வாய்திறந்தார். யாழ்ப்பாணம்தான் போகிறார் என விளங்கியது. இப்போது வியர்வையில்லை; கண்களில் சிகப்பில்லை. ஆனால் முகத்தில் தளர்ச்சி இருந்தது. வாயில் லேசான 'வாடை' வீசிற்று.

'விடுமுறை...?'

'நான் பெரியவரிட்ட சொல்லீட்டன். சுகயீன விடுமுறை தான். எப்ப வருவனென்டு தெரியாது.'

'சாவிக்கொத்து' ...

'நீயே வைத்துக்கொள். நான் வருமட்டும் நீதான் பொறுப்பு. பெரியவரிட்ட சொன்னனான். அவரும் சம்மதிச்சிட்டார்.'

'எனக்கு ஒன்றும் விளங்குதில்லை ஐயா..?'

'விளங்காதுதான். இப்பத்தே பொடியன்தானே நீயும் உங்களுக்கு ஒன்றும் விளங்காதுதான். பெத்தவையின்ரை வில்லங்கம் பிள்ளையளுக்கெங்கை விளங்கப்போகுது? ஒருத்தனை டாக்குத்தர் ஆக்கப் பாத்தன். அவன் இப்ப கனடாவில பெற்றோல் அடிக்கிறான். ஆனா இங்கத்த டாக்குத்தர் மாரைவிட நல்ல சம்பளம். தாய் மாரை பேக்காட்டிக்கொண்டு இப்ப மற்றவனும்தன்ரை ஆட்டம்...'

சிவத்தார் சொல்ல வந்ததை நிறுத்தி மௌனமானார். பொறுத்திருந்தால் அவரே தொடர்வார். தூண்டிக் கேட்க முயன்றாலோ அந்தக் கதையையே விட்டுவிடுவார்.

'இப்ப மற்றவனும்' என்றாரே அதற்கு என்ன அர்த்தம்? முன்பு மூத்தவன் என்ன செய்தானோ அதேதானோ?

ஒருவருடத்திற்கு முன்னரும் ஒருநாள் சிவத்தார் இப்படித்தான் பதறிப்போனார். அது மாங்குளத் தகர்ப்பு. பத்திரிகைகளில் கொட்டை எழுத்துகளில் வெளிவந்த ஒரு பொன்னான நாள்.

பத்திரிகையைப் பார்த்து எல்லோரும் மெய்சிலித்துப் போனார்கள். குழுக்குழுவாய் கூடி வேங்கைகளின் வீரத்தையும் தியாகத்தையும் மெச்சிப் புகழ்ந்தார்கள். எங்களிடையே சிவத்தாரும் இருந்தார். துள்ளிக குதித்தார். வயதுக்கு மீறிய ஆர்ப்பாட்டம். வழக்கம்போல் எங்கோ பொறுக்கிய புறநானூற்று மேற்கோள்களை அவிழ்த்து விட்டார். புலிகளுக்கு பூப்போட்டு கும்பிட வேண்டுமென்றார். கரும்புலியைப் பெற்ற தகப்பனாக நானில்லையே எனக் கனமாக ஏங்கினார். அவர் ஏங்கி முடியுமுன் அலுவலக உதவியாள் அன்றைய கடிதங்களை எடுத்து வந்து விட்டான்.

சிவத்தாருக்கும் கடிதம் இருந்தது. 'போகத்தை தப்பவிட்டுட்டன் அதுதான் மனுஷி மோகத்தில் கோபமாய் எழுதியிருக்கிறா போலை' என விஷமச் சிரிப்போடு கூறிய மனிதர் கடிதத்தைப் பிரித்தார். நான் ஏதோ வேலையில் மூழ்கியவன் மேசை மீது குத்தும் சப்தம் கேட்டு திடுக்கிட்டு நிமிர்ந்தேன். சிவத்தார் உருத்திரமூர்த்தியாய் நின்றிருந்தார்.

நேற்றையைப் போலத்தான் அன்றும் சிவத்தார் உடனேயே யாழ்ப்பாணம் கிளம்பிவிட்டார். யாழ்ப்பாணம் போய், கொழும்பு போய், ஆடிஓடி அவர் மீண்டும் வேலைக்கு வர ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது. கூட்டிக் கழித்துப் பார்க்கையில் இம்முறையும் அப்படித்தான் நடக்கும் போலத் தெரிகிறது.

★

செந்தில் சிரித்தான்.

'உதுதான் மச்சான் சிவத்தார். ஆமிக்காரனும் நேவிக்காரனும் அலுவலகத்துக்கு வந்தால் 'அவுட் ஒவ் தவே'யா வழிஞ்சு வழிஞ்சு உதவி செய்யுற மனிசன். சிநேகிதமோ சிநேகிதமில்லையோ எங்கடை ஆக்களுக்கு உதவி செய்யுறதெண்டால் 'அடி' கேட்பார். வாயாலை எப்பவும் இயக்கத்தைவிழுந்து கும்பிடுவார். மாவீரர் நாளுக்கு ஒருநாள் சம்பளம் தர நானூறு விமர்சனம் செய்வார்.

'உப்பிடியும் சனம் இருக்கத்தான் செய்யும் செந்தில். எல்லோரும் உன்னுடைய அப்பாவாய் ஆக முடியுமே... உன்னுடைய தகப்பன்ஒருதெய்வம் .. ஓ அதுபிழை .. தெய்வத்தை எங்களுக்கு நேரிடையாய் தெரியாது. உன்ரை அப்பா என்னளவில ஒரு முழுமையான மனிதர்;மாமனிதர்.

'நீ வழக்கம்போல புழுகத் தொடங்கி விட்டாய்...' என என்விலாவில்செல்லமாகக் குத்தினான் செந்தில். 'அப்பர் பெரிதாய் ஒன்றும் செய்யவில்லை மச்சான். கம்பஸ்சில் ஒரு வருடம் படித்த தம்பிக்கு அந்த எண்ணம் வந்ததுதான் வியப்பு பல்கலைக்கழகம் போனாலே எத்தனை கற்பனைகள்... அவ்வளவையும்ஈழச் சிந்தனையில் முறித்து விட்டு வந்தானே...அவனைச்சொல். எங்களுடைய வறுமையிலும் அவனை நாம்நோகாமல் செல்லமாக வளர்த்தோம். இருந்தும் கூடநோகிற மக்களுக்காக அவன் புறப்பட்டானே.. இதெல்லாம்இன்னும் என்னை மலைக்க வைக்குது.'

'எல்லாம் சரி மச்சான்... ஆனால் உன்ரை அப்பா அவர் என்ன செய்தார்? தம்பியின் விருப்பம் அறிந்த உடனே சண்டை போட்டாரா... இல்லை. அதைரியப்படுத்தினாரா... இல்லை. அவனுடைய மனதை மாத்தப்பாத்தாரா இல்லை. தான்பெற்ற ஐந்து பெண்களான உன்னுடையதும் அவனுடையதுமான சகோதரிகளைக காட்டி அழுதாரா... இல்லை.'

'மனிதர்தம்பியின்விழிகளை கொஞ்ச நேரம் நேருக்கு நேர் பாத்திருக்கிறார். பிறகு அவனுடைய தலையை வாஞ்சையோடு தடவி விட்டிருக்கிறார். நீ மாலையில் போகலாம்... அதற்கு முதல் ஒரு அலுவல் இருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்.'

'உங்களுக்கெல்லாம் நெஞ்சுக்குள்ள ஒரு திக் திக், அப்பாவின் அமைதியில் உங்களுக்குப் பயம், ஆனால் அப்பா...'

'அவர் தம்பியின் அப்பா —'

'அவர் நம்புவது முருகனை' சூரனை வதம் செய்து தேவர் துயர் தீர்த்தவனை. அவனது பக்தர் அவர்.'

'உன்தம்பியை மதியப்பூசைக்கு அழைத்துப் போனார். அவனது பெயரால் விசேட அருச்சனை செய்வித்தார். தம்பியின் நெற்றியில் தன் கையால்திலகமிட்டார்கோவிலை வீதி சுற்றி கும்பிட வைத்தார் கண்கள் பனிக்க அவன் கையைப் பற்றி 'வென்று வா மகனே' என வழியனுப்பிவைத்தார். அந்தத் தைரியம் ..அது ஆருக்கடா வரும்...?'

அவன் வீட்டில் நடந்ததை நான் மீட்டிக் காட்ட செந்திலின் கண்கள் ஆறாகிச் சொரிகின்றன. அதைக் கவனித்தபடியே தொடர்கிறேன் நான்.

'ஆனால் சிவத்தார்...

'மூத்தவன் இயக்கத்துக்கு ஒத்தாசையாய் ஓடித்திரிகிறான். இரவு சென்றிக்கு படிக்கிறனெண்டு கள்ளமாய் போறான்... என்று மனைவிஎழுதிய கடிதம் கையில் கிடைத்தவுடன் யாழ்ப்பாணம் பறந்து மகனை மடக்கி கொழும்பு கொண்டுபோய் பிரான்சுக்கு அனுப்பி... இப்ப மூத்தவன் பிரான்ஸ்சால கனடாவுக்கு மாறி சுளை சுளையாய் பணமனுப்புறான்'

'மனிசன் விதம் விதமாய் குடிக்கிறார்.'

'இப்ப மற்றவனுக்கும் அதுதான் பிரச்சினையாய் இருக்கும்'

'இனி அவனும் சுவிசோ... பிரான்சோ...'

'ஆனால் செந்தில், தம்பியைப்போலவோ தம்பியின் தகப்பனைப் போலவோ ஆக்களைகாணுறது அருமை. அந்த அருமைகளின் வீட்டிலஎனக்கு உன்ரை சிநேகிதம் இருக்கு. உண்மையில எனக்குள்ள ஒரே பெருமையும் அதுதான் போல தெரியுது.'

(யாவும் கற்பனை)

---

### ஊரடங்குச்சட்டம்

சட்டத்தைக் கேட்டன்று
மக்கள் அடங்கினர்!
மக்களைக் கண்டின்று
சட்டம் அடங்குதே!!

### தமிழரின் செந்நீர்

தமிழரின் செந்நீர்
தாயகம் மீட்கும்!
தாயகம் மீட்டெங்கள்
தமிழர சாளும்!!

### பதுங்கும்

பாதையில் இடர்களா?
பொருளெலாம்
பதுங்கும்!
பாதைகள் வழமையா?
பொருளெலாம்
துலங்கும்!!

- சரவணன்

# இறந்தவரின் கண்கொடுத்து இருப்பவரின் கண் காப்பீர்

இப்போது யாழ் போதனா வைத்தியசாலையில் கண் அறுவைச் சிகிச்சை நிபுணர் எஸ் குகதாஸனால் கண் மாற்றுச் சிகிச்சை நடைபெறும் இந்தத் தருணத்தில் கடந்தகாலத்தைத் திரும்பிப் பார்க்கும் போது இந்தக் கண் மாற்றுச் சிகிச்சை யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் 1952இல் ஆரம்பமாகியுள்ளது. யாழ்ப்பாணத்தில் கண் மாற்றுச் சிகிச்சையின் பிதாமகர் டாக்டர் பி. சிவசுப்பிரமணியம். கண் அறுவைச் சிகிச்சைத் துறையில் ஆசியாவின் முதல் F. R. C. S. இவர். இவருக்குப்பின் யாழ் பெரிய ஆஸ்பத்திரியில் பணியாற்றிய கண் அறுவை சிகிச்சை மருத்துவர்கள் பலர் கண் மாற்றுச் சிகிச்சையில் தங்கள் பங்களிப்பைச்செய்திருக்கிறார்கள். இந்த வகையில் டாக்டர் பி. சிவசுப்பிரமணியத்துக்குப் பிறகு கண் அறுவைச் சிகிச்சை மருத்துவர்களான கண்ணா, கனகரெட்ணம், செல்வி முத்துக்குமாரண, வேலாயுதம், நிர்மலானந்தன், அபயசிங்கா, அருணாசலம், கண்ணுத்துரை ஆகியோரை போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் நினைவு கூருகின்றன. மனமுசந்து இவர்கள் செய்த பங்களிப்பைத் தொகுத்துப் பார்த்தால், அது பயன் பொருத்தமாக இருக்கும். சம்பவங்களைக் குறித்து வைக்கும் பழக்கம் நம்மவரிடம் வெகுவாகக் குறைவாக இருப்பதால் டாக்டர்கள் சிவசுப்பிரமணியத்துக்கும் குகதாஸனுக்குமிடைப்பட்ட காலத்தில் நடைபெற்ற கண்மாற்றுச் சிகிச்சைகள் பற்றிய விபரங்கள் நினைக்கப்படாமலேயே இருக்கின்றன இந்தப் பின்னணியில் டாக்டர் எஸ். குகதாஸன் கண் மாற்றுச் சிகிச்சையை அர்ப்பணிப்புடன் தொடர்ந்து செய்து வருகிறார். இந்த வரலாற்று நிர்ப்பந்த காலத்தில் நவீன தொழில் நுட்ப வசதிகள் இல்லாத காரணத்தால் கண் மாற்றுச் சிகிச்சை முழுமை அடைந்திருக்கிறது என்று சொல்ல முடியாது. இறந்தவர்களிடமிருந்து எடுக்கப்படும் கண்களைஇரண்டு வாரங்கள் வரை பதுகாத்து வைக்கக் கூடிய எம். கே. மீடியம் என்றழைக்கப்படும் Mc Kofmanஎன்ற வசதி யாழ் போதனா வைத்தியசாலையில் இல்லை. சாதாரண நிலைமைகளில் இறந்தவர்களிடம் இருந்து பெறப்படும் கண்களை குறைந்தது மூன்று நாட்கள் தான் பழுதடையாமல் பாதுகாப்பாக வைத்திருக்க முடியும். அதுவும் இறந்தவரின்கண்களை அவர் இறந்து ஆறுமணித்தியாலங்களுக்கிடையில் அறுவைச் சிகிச்சை மூலம் எடுத்துப் பத்திரப்படுத்த வேண்டும். இல்லாது போனால் பயனில்லை.

கண் மாற்றுச் சிகிச்சை கொழும்பில் 1965இல் ஆரம்பிக்கப்பட்டது யாழ்ப்பாணத்தில் இந்தச் சிகிச்சை முறை 1952 இல் ஆரம்பிக்கப்பட்டும் அரச உதவி இல்லாத இன்றைய நிலையில் கண் மாற்றுச் சிகிச்சை முறையை வளர்க்கவும், கண் தானம் பெறவும் டாக்டர் எஸ். குகதாஸன் தலைமையில் டாக்டர்களும், தாதிகளும் பணியாற்றி வருவது வரவேற்பதற்குரியது.

கண் சிகிச்சைப் பிரிவைச் சேர்ந்த டாக்டர்கள் மற்றும் தாதிகளைச் சந்தித்தபோது. தேவைப்பட்ட போதெல்லாம் நேரத்தை எங்களுக்கு ஒதுக்கித் தந்து விபரங்களைத்தந்தார்கள் கண்மாற்றுச் சிகிச்சை மிகக் குறுகிய காலத்தில் ஐந்து பேர்களுக்கு நடை பெற்றுள்ளது ஆனால் கண் ஊனமுற்றவர்களுக்கு உரிய காலப்பகுதியில் கண் மாற்றுச் சிகிச்சை செய்ய வேண்டும். காலம் பிந்தினால் அதனால் பயனில்லை என்கிறார், இப் பிரிவைச் சேர்ந்த டாக்டர் ஒருவர்.

இப்படிப்பட்ட மனித சேவைக்கு மத்தியிலும் கண்சிகிச்சைப் பிரிவைச்சேர்ந்தவர்கள் தங்கள் பெயர் விபரங்கள் பத்திரிகைகளில் வருவதை விருப்பவில்லை. அது தற்புகழ்ச்சியாகும் என்கிறார்கள்.

கண்மாற்றுச் சிகிச்சை பெற்ற சிலரைச் சந்திக்கலாம் என்ற ஆதங்கத்துடன் கண் சிகிச்சை வாட் பக்கம் சென்றோம், எமது விஜயத்தை உணர்ந்து அந்த வாட்டில் கடமையிலிருந்த தாதி செய்த உதவி அபூர்வமானது. கண் தானம் பெற்ற ஒரு சிலரைச் சந்திக்க உதவினார்கள் கண்தானம் செய்தவர்களின் உறவினர்கள். குறித்த விபரங்களையும் மனமுகந்து தந்தார்கள்.

கண் மாற்றுச் சிகிச்சை முடிந்து வார்ட்டில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளி சதீஸ். இருபத்தைந்து வயதைக் கடந்த தோற்றம். கண் ஒன்றைக் கட்டியிருந்தார்கள்.

"உங்கள் கண் எப்படி? என்று பேச்சுக் கொடுத்த போது, கட்டிலில் படுத்திருந்தபடியே யோசனையில் ஆழ்ந்திருந்த சதீஸ் கண் விழித்தார் என்று கூறமுடியாது. இரண்டொரு நிமிடங்கள் அமைதி காத்தார். சற்றுக் கழித்து பாரதக் கதையில் வீஷ்மர் மீது கண்களை மூடியவாறு அம்பு எய்தது போல் சோகம் கசியப் பேசினார்.

எனது சொந்த ஊர் மன்னார். கண் மாற்று அறுவைச் சிகிச்சைக்காக சுமார் ஒரு மாத காலம் வார்ட்டில் இருந்தேன். கண் கிடைக்குமா இல்லையா என்ற அங்கலாய்ப்பு. "செத்தவரின் கண் கிடைத்தால் தான் கண் மாற்றுச்சிகிச்சை" இப்படிச் சொல்லி வைத்தார், கண் அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.குகதாஸ். இருட்டில் அமிழ்ந்து விட்ட பின் வெளிச்சம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் வேறு சிலரும் கண் வார்ட்டில் தங்கியிருந்தார்கள். போதனாவைத்தியசாலையில் நோயாளிகள் சாகாத நாளில்லை. ஆனால் கண்தானம்தான் செய்கிறார்களில்லை- இறந்தவரின் உறவினரைக் கேட்டும் பயனில்லை. அவர்கள் முகாரி பாடுகிறார்கள். எனது நம்பிக்கை, முயற்சிகள் எல்லாம் வீணாயின. ஏமாற்றம் அழுத்த ஒரு விதமான விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டேன். என்னைப் பொறுத்த வரையில் ஆற்றில் ஒரு கால். சோற்றில் ஒரு கால்.

## இறந்தவர் இன்னொருவர் மூலம் உலகத்தைப் பார்க்கலாம்

இறந்தவர்களின் உறவினர்கள் கண்தானம் செய்ய ஒப்புக் கொள்வார்களா? இந்த எண்ணம் இராப்பகலாய் என் மனதைக் குடைந்தது கண்வார்ட்டில் தாதிகள் இறந்தவர்களின் கண்களைக் கேட்கும்படி எனக்கு எப்போதும் தூண்டுதலாக இருந்தார்கள். கடமை நேரத்துக்கு அப்பாலும், எந்த நேரத்தில் கண்கிடைத்தாலும் கண் மாற்று அறுவைச் சிகிச்சை செய்ய டாக்டர் எஸ். குகதாஸனும், அவரது உதவியாளரும் தயார் நிலையில் இருந்தார்கள். மருத்துவ காரணத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்த இவர்கள், எனக்காக மாத்திரமல்ல, வார்ட்டில் தங்கியிருந்த கண்பார்வை இழந்தவர்களுக்கு கண் மாற்றுச் சிகிச்சை செய்ய வேண்டும் என்று பெரும் அக்கறை காட்டினார்கள்.

உறவினர்களுடன் கதைத்துப் பேசி கண் தானம்பெற என்னை அனுமதித்தார்கள் இறந்தவர் ஒருவரின் உறவினரை முதல் முதலாய் அணுகிப் பார்த்தேன். "இல்லை" என்று ஒரு வார்த்தையில் பதில் கூறிவிட்டுத் திரும்பிக் கூடப் பார்க்காமல் படி இறங்கிப் போய்விட்டார்கள். இது எனக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தந்தது. எனக்குள் அழுது கொண்டேன். என் நண்பர்களும் எனக்காக முயற்சித்தார்கள். என் காரணமாகவே மற்றவர்களும் சிலுவை சுமக்கிறார்கள் என்று ஆறுதலாக இருந்தது. டாக்டர்களும், தாதிகளும் இன்னும் சிலருடன் பேசிப் பார்த்தார்கள். எவரும் கண்தானம் செய்யமுன் வரவில்லை.

> "உடலைத் தகனம் செய்யும் போது உடலுறுப்புகள் முழுமையாக இருக்க வேண்டும் என்று சிலரால் சொல்லப் பட்டது. ஆனால் இராணுவ அனர்த்தங்களால் செத்து மடிபவர்கள் உடல் உறுப்புகள் இல்லாமல் தகனம் செய்யப் படுவதை இவர்கள் ஏனோ உணரத் தவறி விட்டார்கள்".
>
> **பேட்டி: மதன்**

## முயற்சியைக் கைவிடவில்லை

வீணாக அலட்டி சதீஸ்சின் தூக்கத்தைக் கெடுத்ததாக வருத்தப்பட்டுக் கொண்டேன். அவர் தொடர்ந்தார்:

சமகாலத்தில் இன்னுமொருவர் கண்வார்ட்டில் அனுமதிக்கப்பட்டுக் கண் மாற்றுச் சிகிச்சைக்காக காத்திருந்தார். அவரது குடும்பம் வறுமையில் வாழ்ந்தது. வார்ட்டில் அக்கம் பக்கத்தில் இருந்ததால் அவரின் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள முடிந்தது. அவரை நேச பாசத்துடன் பார்த்தேன் என்னை விட முதலில் அந்த மனிதருக்கே உதவி செய்ய வேண்டும் என்பது எனது ஆசை.

அளவெட்டி வாசி ஒருவர் ஆஸ்பத்திரியில் இறந்ததாக அறிந்து முயற்சித்துப் பார்க்கலாம் என்ற மனிதருக்கே இயல்பான ஆசை என்னை உறுத்தியது. இறந்தவர்களின் உறவினர்களை அணுகியபோது பல்வேறு உணர்வலைகள். எங்கள் வார்ட்டில் கண் பார்வை இழந்த குடும்பஸ்தர் ஒருவர் இருக்கிறார். குடும்ப நிலை மிகக் கஷ்டம். சில நாட்களுக்குள் கண் மாற்றுச் சிகிச்சை செய்யத் தவறினால் அவரின் கண்களை அகற்ற வேண்டிய அவல நிலை ஏற்படலாம். அவரை விட இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலுக்கு உள்ளாகி கண்களை இழந்தவர்களும் வார்டில் இருக்கிறார்கள். நீங்கள் இறந்துபோன உங்கள் உறவினரின் கண்களை தானம் செய்தால் இறந்தவர் இன்னொருவர் மூலம் உலகத்தைப் பார்க்கலாம். இறந்தவரிடமிருந்து கண்களை அறுவைச் சிகிச்சை மூலம் எடுப்பதால் உங்களுக்கோ, இறந்தவர்களுக்கோ எந்த விதப் பாதிப்பும் ஏற்படாது. கண்களை எடுத்த அறிகுறியும் தெரியாது— இவ்வாறு காலில் விழாத குறையாகக் கேட்டேன் சிறிது நேரம் இறந்தவர்களின் உறவினர்கள் மௌனமானார்கள். அப்போது இறந்தவரின் சகோதரி தலையிட்டுக் கண்தானம் தர மறுத்து விட்டார். பனிக் கட்டியில் அகப்பட்டது போல் எனது உடல் விறைத்துப் போயிற்று. சுதாகரித்துக் கொண்டு வேறு வழியின்றித் திரும்பி விட்டேன்.

## உறவினர்களின் அறியாத்தனம்

எப்படியாவது கண்களைப் பெற்றுவிடவேண்டும் என்ற வெறி எனக்கு உண்டாகியது. நித்தமும் தவறாது இறந்தவர்களின் உறவினர்களைச் சந்தித்தேன். இறந்தவர்களின் கண்களை அகற்றக் கூடாது என்ற அறியாத்தனத்தால் பலர் எனது வேண்டுகோளுக்குச் செவி சாய்க்கவில்லை. கண்களை எடுத்தால் அடுத்த பிறவியில் கண்கள் இல்லாமல் பிறப்பார்கள் என்ற ஐதீகம் வேறு. உடலைத் தகனம் செய்யும் போது உறுப்புகள் முழுமையாக இருக்க வேண்டும் என்றும் சிலரால் சொல்லப்பட்டது. ஆனால் இராணுவ அனர்த்தங்களால் செத்து மடிபவர்கள் உடல் உறுப்புகள் இல்லாமல் தகனம் செய்யப்படுவதை இவர்கள் ஏனோ உணரத் தவறிவிட்டார்கள். வெறுப்பினால் உள்ளான உந்துதல் காரணமாக வைத்தியசாலையில் இருந்து வெளியேற முயற்சித்தபோது தாதிகள் என்னைக் கட்டாயப் படுத்தி நிறுத்தி நம்பிக்கையுடன் முயற்சி செய்யும்படி கேட்டார்கள்.

இது இப்படியிருக்க கல்வியங்காட்டைச் சேர்ந்த ஒருவர் விபத்தில் இறந்ததும் அவரின் மகனை அணுகினேன். சற்றுத் தயங்கிய நிலையில் கண்களைத் தருவதாகச் சொன்னார். இறந்தவரின் கண்களை எடுப்பதற்கானஏற்பாடுகளும் செய்யப்பட்டன. நினைத்தது போல் நடக்கவில்லை. முதலில் பரிவு காட்டியவர் தாயார் மறுப்பதாகக் கூறி கையை விரித்து விட்டார். வைத்தியசாலை வெளிவாசல் வரை சென்றேன். என்னைப் பற்றிச் சட்டைசெய்யவேயில்லை. மனத்தின் கதவுகளை மூடிக்கொண்டார்கள்.

கவலை என்னை வாட்டியது. அதே தினம் இரவு 9 30 மணியளவில் அலுவலகத்தில் விசாரித்தபோது ஒருவர் இறந்ததாகச் சொன்னார்கள். விசாரித்த போது இறந்தவரின் நெருங்கிய உறவினரான பலாலி றோட் திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த சத்திய சீலன் எந்த விதத் தயக்கமும் இன்றி இறந்தவரின் கண்களைத் தருவதற்கு முன்வந்தார். செய்தி அறிந்ததும் டாக்டர் செல்வி சு. செல்லத்துரை சிரமத்தைப் பாராது ஆஸ்பத்திரிக்கு விரைந்து இறந்தவரின் கண்களை எடுத்துப் பாதுகாப்பாக வைத்தார். மறுநாள் காலை மற்ற வேலைகளை எல்லாம் ஒரு புறம் தள்ளிவிட்டு, டாக்டர் குகதாஸன் முதலில் அறுவைச் சிகிச்சை மூலம் இறந்தவரின் கண்களை எனக்குப் பொருத்தினார். டாக்டர் செல்வி சு. செல்லத்துரையும் உடனிருந்து கவனித்தார் எந்தவித பிரதிபலிப்பையும் எதிர்பார்க்காமல் தக்க நேரத்தில் சத்தியசீலன் செய்த முக்கியமான உதவியை என்னால் மறக்கவேமுடியாது. உயிரிருக்கும் வரை நினைவிருக்கும். இவரைத் தவிர, அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்ட டாக்டர் எஸ்.குகதாஸ். அவருக்குதவியாகஇருந்தடாக்டர் செல்விசு.செல்லத்துரை மற்றும் வாட்டில் கடமையிலுள்ள தாதிகள் அனைவருக்கும் நான் கடமைப்பட்டவன் இவர்களுக்கு நான் செலுத்தும் நன்றியை எளிதில் விபரித்து விட முடியாது...இன்றுகண் நல்லபடியாகக் குணமாகிவருகிறது. இன்னும்சொற்ப நாள்களில் என்னால் புது மனிதனாக உலகத்தைப் பார்க்க முடியும்.

## மார்க்கண்டு சத்தியசீலன்

அவரைச் சந்தித்தபோது-

இறந்தவர் எனது ஒன்றுவிட்ட அண்ணர். இறக்கும் போது அவருக்கு வயது அறுபது சருமநோய் மற்றும் சிறுநீரகக் கோளாறு காரணமாக 3-2-93 இல் காலமானார். அவருக்கு ஐந்து பிள்ளைகள் கடைசிப் பெண் பிள்ளை தான ஊரில். ஆண் பிள்ளைகள் வெளியில் என்பதால் நான் தான்அவருக்குஉதவியாக இருந்துவந்தேன். உயிருடன் இருக்கும்போதே கண் தானம் செய்ய வேண்டும் என்றார். மகள், அவரது மனைவிஎவரும் கண் தானம் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க வில்லை. "கருகிப்போற கண்தானே. செத்துப்போனால் கொடுங்கள்" என்று உயிருடன் இருக்கும் போதே எனது அண்ணர் கூறியிருந்தார்.

மரணச் சடங்குகளின் போது கண்தானம் செய்த விஷயம் மனைவியையும், மகளையும், என்னையும் தவிர மற்றவர்களுக்குத் தெரியாது. கண்களில் கூட இரத்தம் கசியவில்லை. இப்போதுதான் மற்றவர்களுக்குத் தெரியும் என்றார்.

சத்தியசீலனுக்கு வயது 30, வீடமைப்புத் திணைக்களத்தில் சிற்றூழியர், விவாகமானவர், கண்தானம் பெற்ற சதீஸ் என்பவரை தான் குடும்பத்துடன் சென்று ஆஸ்பத்திரியில்பார்க்கவேண்டும் என்கிறார் அவர்.

[7ஆம் பக்கம் பார்க்க]

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்.

பொருளியல் — திரு. கலாகரன்

93 Sat - Sun 10 - 11 பாடத்திட்டம்
,, 12 - 1 பாடத்திட்டம்
,, 1 - 2 வினாவிடை

94 ,, 11 - 12 பாடத்திட்டம்

(சி-6139)

## அந்திவானம் பதிப்பகம்

(ஸ்கிறின் பிரின்டிங்)

உங்களுக்குத் தேவையான ஸ்கிறின் பிரின்டிங் வேலைகள் தரமாக செய்து கொடுக்கப்படும்.

பெரியகடை, யாழ்ப்பாணம்.

(4393)

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 1966 | 1987 |
| 11 | 03 |
| 13 | 05 |

### வீரவேங்கை கமல்

(கபிரியேல்பிள்ளை கிறிஸ்துராஜா)

ஆறு ஆண்டுகள் அதற்குள் பறந்தாலும்
ஆறாது உன்பிரிவு தந்த துயர்!
வீறுடன் புறப்பட்ட வீரவேங்கையே
நீறு பூத்த நெருப்பாக உன் நினைவு எம்முடன்!
நீ சுமந்து நின்ற இலட்சியங்கள் வெல்லப்படும்
அதற்காக உழைக்கும் கரங்களுடன்
அணி சேர்ந்து நாமும்.

3-ம் குறுக்குத் தெரு, குடும்பத்தினர்.
பருத்தித்துறை. (4377)

## விமானப்படை தளபதி சேவை நீடிப்பு

(கொழும்பு)

விமானப்படைத் தளபதி ரெறன்ஸ் குணவர்தனாவுக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்தகவலை உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## BECON

(பாரதிதாசன்)
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தமிழ் -
திரு. சி. கணேசலிங்கம்
(B.A. Hons)

யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரைகள்

ஆரம்பம் - 6-3-93 சனி

B. A. PART I
சனி, ஞாயிறு :
1—2 இலக்கணம்
வெள்ளி :
4—5 இலக்கியம்

G. A. Q -
சனி, ஞாயிறு
11 — 12

★ பேராதனைப் பல்கலைக் கழக வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

(சி/ 6132)

## கலை நிகழ்ச்சிகள் திகதி மாற்றம்

ஏற்கனவே எங்களால் அறிவிக்கப்பட்டிருந்த பல்கலைக்கழக நிதி சேகரிப்பு கலை நிகழ்ச்சியும் அரியாலையில் கலைமகள் மைதானத்தில் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சியும் பின்வரும் திகதிகளுக்கு மாற்றப்பட்டுள்ளதை அறியத்தருகிறோம்.

06-03-93 — அரியாலை கலைமகள் மைதானம்.
களத்தில் காத்தான் (நாடகம்)
அவலங்கள் (சிந்துநடைக்கூத்து)

10-03-93 — பல்கலைக்கழக மைதானம்
(சாந்தன் இசை நிகழ்ச்சியும், உணர்வுடன் எழுவோம் (நாடகம்)

— நன்றி —

(சி- 6142)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு
குருநகர் புனித யாகப்பர் மகளிர் ஒன்றியம்
பெருமையுடன் வழங்கும்

## நாடக விழா

### ★ இலங்கேஸ்வரன் ★

[வடமோடி நாட்டுக்கூத்து]

### ★ களம் கண்ட காரிகை ★

[விடுதலை வீராங்கனை புனித ஜோன் ஒவ் ஆர்க் சரிதை]

இடம்: திருமறைக் கலாமன்ற அரங்கு

காலம்: 6-3-93 சனிக்கிழமை பிற்பகல் 6.30 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிதா பி. எம். இம்மனுவேல்
பங்குத்தந்தை - குருநகர்.

[சி-6134]

## சிந்தனைத் துளிர் தொடர் அறிவியல் கருத்தரங்கு

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம்
மாதந்தோறும் நடாத்த இருக்கின்ற தொடர் கருத்தரங்கின்

### அங்குரார்ப்பண நிகழ்வு

இடம் : கல்யாண மண்டபம், பருத்தித்துறை சிவன் கோவில்
காலம் 05 - 03 - 93 இன்று வெள்ளிக்கிழமை பி. ப. 4.00 மணி

### நிகழ்ச்சி நிரல்

1. மங்கள விளக்கேற்றல் — திரு. ச. செல்லத்துரை [பிரதிக்கல்விப்பணிப்பாளர் வடமராட்சி]
2. பக்திப் பாடல்கள் — திரு. சிவனேசன் குழுவினர்
3. சமயநெறி வெளிப்படுத்தும் ஒழுக்கப்பண்புகள் விரிவுரை — திரு. நாகநாதன் ஞானகுமார் சிரேஷ்ட விரிவுரையாளர் மெய்யியல்துறை யாழ். பல்கலைக்கழகம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஐக்கிய விளையாட்டுக்கழகம்
பருத்தித்துறை

விளம்பரதாரர்:
ராஜன் சைக்கிள் வேர்க்ஸ்
ராஜன் வீடியோ மூவிஸ் ஸ்தாபனத்தார்
பருத்தித்துறை

(சி6138)

வாருங்கள்! வந்து பாருங்கள்!! பாரதி விளையாட்டுக்கழக நிதிக்காக

# நாளை மாபெரும் நாடகக் கலைவிழா

**காலம்: 06 - 03 - 1993 சனிக்கிழமை இரவு 7.30 மணி**
**இடம் : அராலி, இந்துக் கல்லூரி திறந்த வெளியரங்கு**



வட்டூர், ராகவராஜன் இசைக்குழுவினரின்

### ◎ இசை அமுதம் ◎

அராலியூர் செந்தமிழ் நாடக மன்றம் வழங்கும்
என். பிரபாவின்

**விடுதலைக் காத்தான்** இசை நாடகம்

'இந்தமண் எங்களின் சொந்தமண்' புகழ்
**S. G. சாந்தன்** அரிச்சந்திரனாகவும்

அரியாலையூர் நடிககலாமணி
**V. செல்வம்** சந்திரமதியாகவும் இணைந்துவழங்கும்

அரியாலை 'கலைமகள்கலைஒளி' நாடகமன்றம் வழங்கும்

## அரிச்சந்திரா மயான காண்டம் ( புராண இசைநாடகம் )

(4389)) அன்பளிப்பு: லீலா பேக்கவுஸ் & லீலா ஸ்ரோர்ஸ் ஸ்தாபனத்தார் சங்கானை

# விடுதலை வேண்டும்

அங்கத்துவ எண்ணிக்கை 32 ஆகிவிட்டது. உடனடியாக சேர்வதற்காக 19 விண்ணப்பங்கள்பரிசீலனையில்உள்ளன. இந்நிலை நீடித்தால் 1994ஆம் வருடாந்தமாநாட்டில் 100க்கு மேற்பட்ட பூர்வீக மக்களின் பிரதிநிதிகள்விடுதலை அமைப்புக்கள் நிழல் அரசுகள் கலந்து கொள்ளும்நிலையேற்படலாம் இவ்வளர்ச்சி வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் UNPO திணறுகின்றது. எஸ்தோனியா லட்வியா, ஜோர்ஜியா, ஆர்மினியா ஆகிய ஆரம்பகாலத்தில்இவ்வமைப்பின் உருவாக்கத்திற்கு உதவிய நான்கு அங்கத்தவர்கள் இன்று தத்தமக்கென தேசிய அரசுகளை உருவாக்கியமை இத்தாபனத்திற்கு உரமூட்டுகிறது.

UNPOவின் தோற்றம் வரலாற்று ரீதியாக தவிர்க்கமுடியாத நிகழ்வாகின்றது. ஏனெனில் குடியேற்றவாதத்திலிருந்து விடுதலை பெற்ற நாடுகள் நுணுகிய பகைமை உணர்வுகளை தத்தமது பிரசைகள் மீதே வளர்த்துள்ளனர். இந்தியா, இந்தோனேசியா, நைஜிரியா, சிறிலங்கா போன்றவை விடுதலை கோரும் தமது குடிமக்களையே கொன்று குவிக்கின்றனர். 1975 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தோனேசியாவால் ஒடுக்கப்படும் கிழக்குத் திமோரில் இரண்டு இலட்சம் மக்கள் கொல்லப்பட்டனர். இந்தியபாதுகாப்புப்படையினரால நாளாந்தம் 30-40க்கும் இடைப்பட்ட மக்கள் கொல்லப்படுவதாக காலித்தான் விடுதலை அணியினர் முறையிடுகின்றனர். அதுபோலவே ஈராக்கில் குர்திஷ் மக்கள்படும் அவலங்கள் தக்க உதாரணங்களாகும். ஒடுக்கப்படும் மக்கள் முன்னர் பனிப்போர் நிலவிய காலகட்டத்தில் பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டு தம்மை வெளிப்படுத்தினர். பலர் உதவிக்கும் அங்கீகாரத்திற்கும் சோசலிச அணியினரை நாடினர். இவ்வுதவி கிட்டாதோர் மேற்குலகஅணியினை சார்ந்தனர் ஆனால் இன்று இரண்டும் கெட்டான் நிலை. எனவே இத்தகைய சூழலில் UNPOவின் தோற்றம் தவிர்க்க முடியாத நிகழ்வாகிறது.

மூன்று உலகங்களின் விடுதலைஉணர்வைமட்டும்UNPO பிரதிபலிக்கவில்லை. இதுவரை அறியப்படாத நான்காம் உலகத்தின் உரிமைக்குரலும் இங்கு ஓங்கி ஒலிக்கின்றது. தங்களது சொந்த மண்ணிலிருந்து, அதன் வளங்களிலிருந்து முற்றாகவோ அல்லது பெருமளவோ அகற்றப்பட்டு, அன்னியப்பட்டு தத்தமது தேசிய அரசுகளில் எவ்வித செல்வாக்கோ பங்குபற்றலோ இன்றி வாழும் பூர்விகக் குடிகளின் வழிததோன்றல்களே இவ் நான்காம் உலக மக்களாவர். இவர்களுடைய பிரச்சினை தனித்துவமானது. முதல் மூன்று உலகங்களிலும் 'நிலங்கள் மக்களுக்குரியனவாக' இருக்க (The land belongs to the Pcople நான்காம் உலகத்திலோ 'மக்களே நிலங்களுக்குரியவர்களாக' இருக்கின்றனர். (The People belong to the Land) இம்மக்களின் தொன்மைக் கலாசாரம், இவர்கள் மொழி எல்லாமே பல நாடுகளில் மறைந்து விட்டன. மறைந்து கொண்டிருக்கின்றன. வட அமெரிக்கா, கனடாவின் பூர்வீகக் குடிகள் தாம் இழந்து போன மொகாவக் (Mohawk) லக்கோட்டா (Lakota) தேசங்கள் பற்றியும் மத்திய அமெரிக்காவின் மாயன் (Mayan) இனக்குழுவின்வழித்தோன்றல் இழந்துபட்ட தமது தொன்மை பற்றியும் தென்னமெரிக்க மபுச்சி (Mapuche) மக்களும் ஆபிரிக்காவின்பட்வா(Batwa) மசாய் (Masai) மக்களும் அவுஸ்திரேலியாவில் கொடுமைகட்குள்ளாகும் பூர்வீகமக்களும் (Aboriginals) தத்தமது பிரதிநிதிகட்கு ஊடாக தமது இருப்பை உலகிற்கு ஞாபகமூட்டினர் இவ்வாறாக இந் நான்காம் உலக மக்கள் 20 ஆம் நூற்றாண்டின் புதிய உலகமானது தமக்கு இழைத்த அநீதிகட்கு நீதி கேட்டு UNPO மாநாட்டில் கலந்து கொண்டனர் இவர்கள் குரல்இங்கு ஒலித்தது இவ்வுலகில் நீதி இன்னமும் மடியவில்லை என்பதை புலப்படுத்துவதாக அமைந்தது.

UNPO வின் 3 ஆவது வருடாந்த மாநாட்டின் சிறப்பம்சம் தன்னாட்சி உரிமை என்பது தேசிய இனங்களின் பிரிக்க முடியாத உரிமை என்பதை மிக வலியுறுத்தி பிரகடனப்படுத்தியதேயாகும் நாடுகள் கடைப்பிடிக்கும்பேரினவாதக் கோட்பாடு இங்கே கடும் கண்டனத்திற்குள்ளாக்கப்பட்டது எனினும் இங்கேயும் முரண்பாடுகள் இல்லாமலில்லை. அங்கத்துவ அமைப்புக்களிடையே ஏற்படும்மோதல்கள் UNPOவை இக்கட்டான நிலைக்காளாக்குகின்றன முன்னையஉறுப்பினரான ஜோர்ஜியாவிற்குஎதிராக இன்னாள்உறுப்பினரானஅக்காசியர்தொடுத்திருக்கும் போராட்டத்தை உதாரணமாகக்குறிப்பிடலாம் விடுதலை உணர்வால்முதலில் ஒன்றிணைந்து இருந்தவர்கள் தத்தமக்கென தேசிய அரசுகளை உருவாக்கியபின் தமக்குள்ளேயும் வெளியேயும்மோதல்களைதவிர்க்க வேண்டுமென்பதேபலரின் கவலையாக இருக்கிறது ஆயினும் இவற்றைவிட கொள்கை ரீதியான முரண்பாடுகளை UNPOவின் சிலஅடிப்படை விதிகள், புதிய அங்கத்துவத்திற்கு விதிக்கும் நிபந்தனைகள் தோற்றுவிக்கின்றன ஒரு அங்கிகரிக்கப்படக் கூடிய புவியியல் வரையறுப்போடு அவ்வவ் மக்களின்பிரதிநிதிகள் தாமே என்பதை உறுதிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் புதிதாக விண்ணப்பிக்கும் தேசியங்கள் பயங்கரவாத வன்முறையை கைவிடுவதாக உறுதிமொழி வேறு அளிக்க வேண்டும். இந்நிபந்தனை கடும் விவாதத்தை தோற்றுவித்துள்ளது. ஏனென்றால் கடந்த மாநாட்டில் புதிதாக அங்கத்துவம் கோரி விண்ணப்பித்தோர் தொகை 24. ஆகஸ் மட்டும்ஏற்கப்பட்டோர் தொகை 10 மட்டுமே. மறுக்கப்பட்டோர்கொந்தளித்துப் போயினர். எதற்காக தாங்கள் ஒதுக்கப்பட வேண்டும் எனபோர்க்கொடி உயர்த்தினர். ஏனென்றால் விடுதலைக்கு போராடுவோரை இவ்வாறுதான் போராடவேண்டும். என்று வரைவிலக்கணம் யாரும் வகுக்க முடியாது என்பதே வரலாறு கண்டஉண்மை. தன்னாட்சி உரிமைக்கு வரைவிலக்கணம் கண்ட சோவியத்துக்கு நேர்ந்ததுஎன்ன வென்பது யாருக்கும் தெரியாதவிடயமல்லவே? ஒவ்வொரு தேசியமும் தனது வரலாற்றுப்பின்னணிக்கேற்ப தனது போராட்ட வழியை வகுப்பதை யாரும் முற்கூட்டியே தீர்மானிக்கமுடியாது என்பதை UNPO செயலர் முற்றாக மறுக்கவில்லை. தனது அமைப்பின் பெரும்பான்மை அங்கத்தவர்களின் விடுதலைக்கான ஆயுத போராட்டத்திற்கும் பயங்கரவாதத்திற்குமஇடையே எல்லைக்கோடு கிழிப்பது மிகக் கடினமானது என்பதை அவர் ஏற்றாலும் போராடுவோர்வேறுவழிமுறைகளான அரசியல் இராசதந்திர வழிமுறைகள் தொடர்புச் சாதனங்களை மிகத் திறமையாக பயன்படுத்தல் போன்ற உத்திகளையும் பயன்படுத்த தாம் உதவப்போவதாககுறிப்பிடுகிறார். எனவே எல்லைக் கோடு கிழிப்பதை விட்டுவிட்டு சகல தேசிய இன விடுதலை அமைப்புக்களையும் அரவணைத்து UNPO செல்ல வேண்டும் என்பதே அனைவரின் விருப்பமாகும். இன்றேல் மாற்று ஐ.நாவின்உருவாக்கம் முழுமைப் பயனைத்தராது. ஏனெனில் UNPOவில் சிலஅங்கத்துவர்கள் கற்பனை விடுதலை உலகில் கனவு காண்பவராக இருக்கலாம். ஆனால் பலர் வன்மையாக போராடுவார்கள். சிலர் தேசிய அரசுகளாக பரிணமிப்பர். இதுவரலாற்று நியதி. எனவே இவ் வரலாற்று காற்று வீசும் திசையிலே UNPOபயணம் செய்கிறது என்பதால், இதன்தோற்றம் ஒடுக்கப்படும் மக்கட்கு நம்பிக்கை அளிப்பதாக உள்ளதாக கருத முடியும்.




## யாழ். ஆரம்பக்கல்வி வளமாக்கல் நிலையம்

யாழ். நகரத்தில் ஆரம்பக் கல்வி வளமாக்கல் நிலையம் ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கை வெகு துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். கல்வித்திணைக்களத்தின் ஆரம்பக் கல்விக்குப் பொறுப்பான கல்விப்பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந் நிலையம் உருவாக்கப்படுவதன் மூலம் யாழ். மாவட்டத்தில் ஆரம்ப வகுப்புக்களில் கல்விகற்கும் மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கவும், ஆரம்பக்கல்வியை பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் தரத்தை உயர்த்தவும் அவர்களின் தேவைகளை நிறைவேற்றவும் முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கோப்பாயில் உள்ள கணித, விஞ்ஞான வள நிலையத்தில் யாழ். மாவட்டத்திலிருந்தும் வந்து கலந்து கொண்ட ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர்களின் கருத்தரங்கில் உரையாற்றும் போது அவர் இதனை தெரிவித்தார். [17]

## பெற்றுக் கொள்ளவும்

யாழ் பஸ்தரிப்பு நிலையத்தின் முன்பாக காசோலை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர் தகுந்த ஆதாரம் காட்டி தமிழ்த்தாய் புத்தகசாலையில் பெற்றுக் கொள்ளவும்.

## "சிந்தனைத் துளிர்"

[பருத்தித்துறை]

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் மாதந்தோறும் நடாத்தவுள்ள ''சிந்தனைத் துளிர்'' தொடர் அறிவியல் கருத்தரங்கின் அங்குரார்ப்பண விழா பருத்தித்துறை பர்வதவர்த்தினிகலா மண்டபத்தில் இன்று பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத் தலைவர் திரு. இ. இராசநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ் விழாவிலே வடமராட்சிக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. ச. செல்லத்துரை சிறப்புரை நிகழ்த்துவார். யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறை விரிவுரையாளர் திரு. நா. ஞானக்குமார் ''சமயநெறி வெளிப்படுத்தும் ஒழுக்கப் பண்புகள்'' பற்றி உரையாற்றுவார். சிவநேசன் குழுவினரின் பக்திப் பாடல்களும் இடம் பெறவுள்ளன. கழகச் செயலாளர் திரு. சி. நந்தகுமார் நன்றியுரை வழங்குவார். [25]

## கமலாசனி வித்தியாலய பவள விழா

யாழ். மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் இன்று தனது பவள விழாவை சிறப்பாகக் கொண்டாடுகின்றது.

1917இல்சரசாலையூர்வித்துவான் கந்தையா இராமலிங்கம் அவர்களால் உருவாக்கப்பட்ட இப்பாடசாலை கடந்த 25-10-1992 இல் தனது 75 வது ஆண்டைப் பூர்த்தி செய்து இன்று தனது பவள விழாவை வெகுவிமரிசையாகக் கொண்டாடும் அதே வேளை பவள விழா மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இறந்தவரின் கண்

## அருத்து சண்டிலிப் பாய் மத்தியைசேர்ந்த வல்லிபுரம் செல்வராசாவைச் சந்தித்தோம். அவர் —

காலஞ்சென்ற எனது தகப்பனார் குட்டித்தம்பி வல்லிபுரத்திற்கு வயது 80. பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி ஆஸ்பத்திரியில் காலமானார். அவருக்கு ஆறு பிள்ளைகள். நான் மூத்த மகன். எனக்கு வயது 55. நெருப்பில் போகிற கண்கள் தானேஒன்றையாவது தாருங்கள் என்று கேட்டார்கள். இரண்டையும் எடுங்கள் என்றேன். வீட்டுக்குப் பிரேதத்தைக் கொண்டு வந்ததும் கண் தானம் செய்ததற்காக எல்லோரும் சந்தோசப் பட்டார்கள். அம்மாவுக்கு வயது 73. அவர் கூட எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இதில் ஆச்சரியம் என்னவென்றால் என் தகப்பனாரை விட எனக்குக் கண் தெரியாது. 1946 ஆம் ஆண்டில் இருமுறை என்னை தமிழ்நாடு திருப்பத்தூர் ஆஸ்பத்திரிக்குக்கொண்டுபோய் எனக்கு ஒப்பரேஷன் செய்தார்கள். எனது அப்பாதான் என்னுடன் கூட வந்தார். இப்போது என் கண் பார்வை மங்கி வருகிறது. தனியார் நிறுவனமொன்றில் கண்பரிசோதனைக்காகக் காசு கட்டியுள்ளேன்.

கண் தானம் செய்ததை உறுதிப்படுத்தி ஏதாவது பத்திரம் தந்தார்களா என்று கேட்டபோது —

ஒரு பத்திரத்தைக் காட்டினார். அது இறப்பை அத்தாட்சிப் படுத்திய துண்டு.

ஃ ஃ ஃ

## சில ஆலோசனைகள்

வண்டு, மரத்தூள். திருநீறு, மரகந்தம், ஷம்பூ ஆகியன விழிவெண்படலத்தில் பட்டால் கண்களில் பாரிய பாதிப்பு உண்டாகலாம். மற்றும்படி கண்களில் இரணம், மற்றவர்களின் மருந்துகளை பாவித்தல், சுயமாக கண் மருத்துவம் (Self Medication) செய்தல் ஆகியனவும் விழிவெண்படலத்தைப்பாதிக்கக் கூடும் என தெரிவிக்கப்படுகின்றது. இதனால் பார்வையை இழக்கும் அபாயமுண்டு.

ஒருவர் சாகும் போது கண்களில் வருத்தம் (Exposive Keratitis) செங்கமாரி போன்றவைரஸ் நோய்கள், இரத்தம் நஞ்சாகும்நோய்கள்(Sep-ticaemia) புற்றுநோய்கள், நஞ்சருந்தல், எயிட்ஸ் போன்றவற்றால் இறப்பவர்களின் கண்களை கண் மாற்றுச் சிகிச்சைக்குப் பாவிப்பது தவிர்க்கப்பட்டிருப்பதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பத்து வயதிற்கு கீழ் பட்டவர் இறந்தால் அவர்களின் கண்களை எடுப்பதும் தவிர்க்கப்பட்டுள்ளது.

1990 ஜூனில் இருந்து டிசம்பர் வரை

## ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வித்திணைக்கள அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்குமான 1990 ஆம் ஆண்டுஜூன் 11-ம் திகதியில் இருந்து டிசம்பர் 31 ஆம் திகதி வரைக்குமான காலப் பகுதிக்கான ஊக்குவிப்பு பணக் கொடுப்பனவு வழங்குவதற்கு வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக அறியவருகின்றது.

இக்கொடுப்பனவு இவ்வாண்டில் வழங்கப்பட்ட இருப்பதாகவும் இதற்கு தேவைப்படும் நிதியை வடகிழக்கு மாகாணக் கல்வியமைச்சிற்கு அறிவிக்கும்படியும் யாழ். கல்வித்திணைக்களத்தை அது கேட்டுக் கொண்டுள்ளது. (பா)

## பேக்கரி உரிமையாளர் சங்க உறுப்பினருக்கு உதவி

[யாழ்ப்பாணம்]

இராணுவ நடவடிக்கையின் காரணமாக இடம் பெயர்ந்த பேக்கரி உரிமையாளர் சங்க உறுப்பினருக்கு இச்சங்கம் பத்துகிலோ மாவும், ஒரு கிலோ சீனியும் வழங்கி வருகின்றது.

இதேவேளை இச்சங்கத்தின் சங்கானை, சண்டிலிப்பாய் கிளை இடம் பெயர்ந்த தமது சங்கஉறுப்பினர்களுக்கு காலை உணவுக்குத் தேவையான பாண் வழங்கி வருகின்றது. அத்துடன் மிகவிரைவில் பாண் தயாரிப்பாளர்களுக்கு பயிற்சிநெறி ஒன்றை யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் நடத்த உள்ளது.

கிளாலி படுகொலையினால் உயிர்நீத்த தமது சங்க உறுப்பினர்களுக்கு ரூபா 50,000யை இழப்பீட்டுத் தொகையாக வழங்கியுள்ளது. தொடர்ந்து சங்க உறுப்பினர்களுக்கு ஏற்படும் இழப்பீட்டை ஈடு செய்ய சங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிய வருகின்றது. [நி]

## உரை

(யாழ்ப்பாணம்)

''சாளரம் வெளியீட்டாளர்களின் ஏற்பாட்டுடன் இன்று மல்லாகம் மகாவித்தியாலயத்தில் பகல் 11 மணி அளவில் ''பிஞ்சு உள்ளங்களில் மிஞ்சும் உணர்வுகள் கொஞ்சும் பாடல்களே'' என்ற பொருளில் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் உரையாற்றுவார்.

ஆண்டு 1

படவுள்ளன.

மேற்படி விடயம் தொடர்பாக மாகாணக்கல்வி அமைச்சு சகல மாவட்ட, உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் சுற்றுநிருபங்களை அனுப்பி வைத்துள்ளது. (17)

மனித உரிமை மீறல் செயல்கள்

# சிறிலங்கா போக்கு குறித்து நோர்வே அரசு அதிருப்தி

(ஒஸ்லோ)

சிறிலங்காவில் மனித உரிமைகள் மீறல் செயல்களுடன் தொடர்புடையவர்கள் மீது சிறிலங்கா அரசு நடவடிக்கை எடுக்கத் தவறியமை குறித்து நோர்வே அதிருப்தி தெரிவித்துள்ளது.

அண்மையில் ஸ்கண்டிநேவியாவுக்கான சிறிலங்காவின் தூதுவர் நெவில் ஜெயவீர உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு அங்கு நான்கு நாட்கள் தங்கியிருந்தார் இதன்போதே மேற்படி விடயம் தொடர்பாக நோர்வேயின் வெளியுறவு அமைச்சகத்தின் ராஜாங்க செயலாளர் ஜான் இக்லான்ட் மற்றும் அமைச்சக உயர்அதிகாரிகள் தமது அதிருப்தியை தெரிவித்துள்ளனர்.

நெவில் ஜெயவீரவுடன் நிகழ்ந்த சந்திப்பின் போது இவர்கள் சிறிலங்கா அரசு வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றை எட்டிய பின்பு சிறிலங்காவின் சமாதான கட்டமைப்புக் காரியங்களுக்கு நோர்வே உதவும் எனவும் சமாதானப் பேச்சு வார்த்தைகளை நோர்வே நாட்டில் நடாத்த இடமளிக்க தமது அரசு முன்வந்துள்ள அதேவேளை இப்பேச்சு வார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிக்க மறுப்புத் தெரிவித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

சிறிலங்காவின் இனப்பிரச்சினை சிக்கல் அடைந்திருப்பதால் நோர்வே இதில் தலையிடப் பின்நிற்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஐ. நா. சங்கம் மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த சிறிலங்கா அரசு தவறியுள்ளதையும் நோர்வே அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

புகையிரத திணைக்கள

## பெப்ரவரி ஓய்வூதிய வவுச்சர்கள் வந்தன

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த புகையிரதத் திணைக்கள ஓய்வூதியர்களுக்கான பெப்ரவரி மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் செயலக ஓய்வூதிய கணக்காளரால் செயலகத்திற்கு எடுத்துவரப் பட்டுள்ளது.

இவர்களுக்கு கடந்த நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதத்திற்குரிய வவுச்சர்கள் கொழும்பிலிருந்து தபால் மூலம் அனுப்பப்பட்டும் இதுவரை வந்துசேரவில்லை என்பது தெரிந்ததே. இதனால் சம்பந்தப்பட்ட ஓய்வூதியர்கள் செயலகத்தில் செய்த புகாரை அடுத்தே செயலக ஓய்வூதிய கணக்காளர் கொழும்பு புகையிரத திணைக்கள ஓய்வூதிய பகுதியினருடன் நேரில் தொடர்பு கொண்டு பெப்ரவரி மாதத்திற்குரிய வவுச்சரை நேரடியாக எடுத்து வந்துள்ளதாக தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த புகையிரத திணைக்கள ஓய்வூதியசங்கத் தலைவர், செயலாளர் தன்னுடன் நேரில் தொடர்பு கொண்டால் தொடர்ந்தும் எனிவரும் மாதங்களுக்கான ஓய்வூதிய வவுச்சர்களை எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த மூன்று மாதங்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவை பெற முடியாமல் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 700 புகையிரத திணைக்கள ஓய்வூதியர்கள் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீதர் திரையில்

## 'தமிழோசை'

முல்லை மாவட்டக் கலை, பண்பாட்டுக் கழகத்தின் தயாரிப்பான 'தமிழோசை' தொலைக் காட்சி சித்திரம் இன்று வெள்ளிக்கிழமை முதல் யாழ். ஸ்ரீதர் திரையரங்கில் காண்பிக்கப்பட இருக்கின்றது.

தென் தமிழீழ மக்களின் துன்பங்களை - துயரங்களை - அவலங்களை எடுத்து விளக்கும் இத் தொலைக் காட்சித் சித்திரம் மாலை 4.00 மணி, 6.00 மணி என இரு காட்சிகளாக காண்பிக்கப்பட இருக்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவரின் பாராட்டுதல்களைப்பெற்றுக்கொண்டது 'தமிழோசை' என்பது குறிப்பிடத்தக்கது.

## அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர் குழுவின் சர்வதேச மகளிர் தின விழா 1993 - 03 - 14 ஆம் திகதி நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. அது தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையில் அங்கத்துவம் வகிக்கும் மகளிர்களுக்கு நடாத்தப்படும் போட்டிகள் பின்வரும் திகதிகளில் காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும். போட்டியாளர்களுக்கு தனிப்பட்ட அழைப்பு அனுப்பப்படமாட்டாது, ஒரு சங்கத்திலிருந்து ஒரு போட்டிக்கு 02 மகளிர்களே பங்குபற்ற அனுமதிக்கப்படுவர். மேலதிக விபரங்களுக்கு சபையுடன் தொடர்பு கொள்ளவும்.

பேச்சு, கட்டுரைப்போட்டிகள் -1993-03-06 சனிக்கிழமை

கோலப் போட்டி -1993-03-07 ஞாயிற்றுக்கிழமை

உணவு தயாரித்தல் போட்டி -1993-03-13 சனிக்கிழமை

-செயலாளர்

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை,
இல. 14, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம் (சி-6143)

## காணவில்லை



கணபதி கனகலிங்கம் (வயது- 34) லொறிச்சாரதி 08. 02. 1993 கிளாலியிலிருந்து கிளிநொச்சி நோக்கிப் படகில் புறப்பட்டவர். இவரைப் பற்றி இதுவரை எதுவித தகவலும் கிடைக்கவில்லை. இவரை யாராவது எங்கு கண்டாலும் கீழேயுள்ள விலாசத்திற்கு தகவல் தரவும்.

தகவல்:-
லீலாதேவி [மனைவி]
கோண்டாவில் வடக்கு. (4396)

## கைக் குண்டிற்கு சிப்பாயும் சகோதரனும் பலி

(கொழும்பு)

கைக் குண்டு வெடித்ததில் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரும், அவரின் சகோதரனும் பலியாகினர்.

மேற்படி சம்பவம் உடபுசலாவையில் குருபனாவேவ நகரின் வீடு ஒன்றில் நடைபெற்றது. இந்த இராணுவத்தைச் சேர்ந்த நபர் விடுமுறைக்காக வீட்டுக்கு வந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

## சிங்கள விவசாயிகளுக்கு துப்பாக்கி

எல்லைப்புறங்களில் வாழும் சிங்கள விவசாயிகளுக்கு அவர்களது பயிர்களைக் காப்பாற்றிக் கொள்ளும் நோக்கத்துடன் சுமார் 1500 வேட்டைத் துப்பாக்கிகளும் 25,000 ரவைகளும் வழங்கப்பட இருப்பதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களின் எல்லையோரக் கிராமங்களில் செய்கையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்கு இவ்வாறாக ஆயுதம் வழங்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

தலைவர்

மன்றத் தெரிவுக் குழுவுடன் சேர்ந்து ஒத்துழைக்கவேண்டும் என்று மட்டும் கூறினார்.

தலைவர் பிரபாகரனின் தமிழோசைப் பேட்டி ஒலிபரப்பப்பட்டு இரண்டு நாட்கள் கழித்து அரசின் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அதே வேளை பிரபாகரனின் கருத்தைக் கொழும்பில் உள்ள அரசுக்கு ஆதரவான தமிழ்க் குழுக்கள் வரவேற்றுள்ளன. மொத்தத்தில் அனைத்துத் தரப்பினரும் தலைவர் பிரபாகரனின் கருத்தை ஆராய்ந்து வருவதாக பி. பி. ஸி. தனது செய்தி விமர்சனத்தில் தெரிவித்தது. தென்னிலங்கைப் பத்திரிகைகள் ஒவ்வொன்றும் தலைவரின் தமிழோசைப் பேட்டி குறித்து தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளன.

## மரண அறிவித்தல்

## இராமையா நாகறட்ணம்

திருக்கோணமலையைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமையா நாகறட்ணம் 24- 2- 93 அன்று கொழும்பில் சிவபதம் அடைந்து விட்டார். இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும் முருகதாஸ் [கனடா], மனோகரதாஸ் [ஜேர்மன்], ஞானதாஸ் [கனடா], தேவதாஸ் [கொழும்பு], மோகனதாஸ் [லண்டன்], சத்தியதாஸ் [கனடா], ஜெயதாஸ் [நோர்வே] ஆகியோரின் அன்புத்தந்தையும், இராஜதுரையின் அன்புச்சகோதரனும், சுந்தரமூர்த்தி, தங்கரதம் ஆகியோரின் அன்பு மைத்துனனும். வசந்ததேவி, யோகேஸ்வரி, சிவசக்தி, நாகேஸ்வரி, கலாவதி ஆகியோரின் அன்பு மாமனாரும், ரமணன், அரவிந்தன், லக்கி, ரகு, அருள், அனுசியா, பிரஸாந்தி, நிஸாந்தி, ஞானகா, விஜே, மிஸா, கோபி, சைலஜா, ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 24- 2- 93 அன்று கொழும்பில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

இவரின் மறைவு குறித்து இன்று [5- 3- 93] மட்டுவில் தெற்கில் உள்ள சரஸ்வதி பவனத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

சரஸ்வதி பவனம்,
மட்டுவில் தெற்கு.
சாவகச்சேரி. [4401]

தகவல்:
செ. பிரதீஸ் [மருமகன்]
[பிரபு]

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 04-03-1993

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்: 8478

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள் இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
26-2827, 26-5962, 42-9325, 42-0526, 24-9490, 26-0407, 26-0673, 42-3114, 41-8875, 24-5529, 24-9758, 28-5294, 42-0962, 42-1019, 24-6533, 26-5870, 41-2479, 24-5418, 26-5846.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம்ஆண்டு மார்ச் மாதம் 5 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.